[illegible]

11

18-5-1935

N35.7-55
208727

1021 ந. 3 1021

Regd. No. M. 2419.



# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
**Adyam Bhagavatha Ranganathachariar**
**KUMBAKONAM.**

21 MAY 1935

பௌர்ணமிதோறும் வெளிவரும்.



| | | |
|---|---|---|
| **Vol. 7.**<br>புஸ்தகம் 7. | யுவ ஸம்வத்ஸரம்<br>வைசாக மாஸம்.<br>(பௌர்ணமி 18—5—35 சனிவாரம்.) | No. 11.<br>நெ. 11. |





| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | தாத்பரிய நிர்ணயம். | 320 |
| 2. | சங்கரலீலா விலாஸம். (ஸ்ரீமான் H. சுப்புராவ்) | 328 |
| 3. | எமது ஜார்ஜ் மன்னரின் வெள்ளித்திருவிழா. | 332 |
| 4. | ஆசாரமாலை. | 336 |
| 5. | ஸ்ரீ நரஸிம்ஹர் சிவனின் சாபாவதாரத்தால் கொல்லப்பட்டதுண்டா. | 340 |
| 6. | செய்தித்திரட்டு. | 345 |
| 7. | ஓர் மாத்வ மாதின் வைராக்கியம். | 346 |
| 8. | மீண்டும் அத்வைதிகளின் கூக்குரல். | 347 |
| 11. | கும்பகோணத்தில் மூன்று ஸ்வாமிகள். | 349 |
| 9. | ஸ்ரீ மத்வ மந்திர ரத்னசாரம். | 350 |
| 10. | விசேஷதினங்கள். | 351 |



ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ. 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து ஓர் பாட்டில் ரூ. 4—8—0

ஆண்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும். ஓர் டின் ரூ. 4—12—0

ஆர்டருடன் ரூ. 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India)

## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப வேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்!**


ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாயநம:


# மாத்வமித்திரன்


MAY 1935 MADRAS

श्रीमन्मध्वमत हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

---

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்

---

## இருபத்தி இரண்டாவது அத்தியாயம்

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

(காபிரைட், முன் 295-பக்கம் தொடர்ச்சி)

---

தர்ம புத்திரர் பதில் சொல்லமுடியாமல் துரௌபதியே! தோஷங்கொண்ட அனுமானத்தை அவலம்பித்து விஷ்ணுவுக்கும் அஸ்வாதந்திரியத்தை சாதிக்கிறாய் என்று சொல்லி துரௌபதியை அதட்டினார். இவ்வாறு துரௌபதிதேவி சொன்ன வார்த்தைக்கு வேறு அர்த்தத்தை கல்பித்து தூஷண ரூபமாகிய கபடவாக்யத்தால் தர்மபுத்திரர் அதட்டவும் துரௌபதி ஸ்திரீயாயிருப்பதால் அதிகமாய் பேசுவது ஸ்திரீகளுக்கு அழகல்லவென்பதற்காக தர்மபுத்திரரை மன்னிப்பு கேட்டுக்கொண்டாள். பிறகு பீமசேனர் தர்மபுத்திரரைப்பார்த்து இவ்வாறு பேசினர். அரசனே! விஷ்ணு ஸர்வகர்த்தாதான். ஜீவன் ஸர்வஜகத்தின் கர்த்தாவாகமாட்டான். விஷ்ணுவைத்தவிர்த்துள்ள எல்லா ஜகத்தும் விஷ்ணுவின் அதீனமாகும். விஷ்ணு ஸ்வதந்திரன் ஆயினும் ஜீவன் வேதத்தில் சொல்லப்பட்டிருப்பதான தன் வர்ணாசிரமங்களுக்கு உசிதமாயுள்ள கர்மாவைச் செய்யவேண்டும்.

208727
030 039



மிக்க [illegible]ப்பட்டு நிஷித்தமான கர்மாவை விடவேண்டும். ஜீவனி[illegible]த்தில் போஜனம் முதலிய ரூபமுள்ள கர்மங்கள் அவனவனுடைய சாக்ஷிப்ரத்யக்ஷத்தால் சித்தமாகிறது. ஆனால் அந்த கர்த்திருத்வமென்பது சில கர்மத்தில் தடைபடுவதால் ஈசுவரனுடைய ப்ரேரணை இதற்கு நியாமகமாய் இருப்பதாய் ஊகிக்கவேண்டியதாகும். புத்திமானான புருஷன் சுருதி ஸ்மிருதிகளில் விஹிதமான தன் கர்மாவைச்செய்து இந்த கர்மாவை செய்ய விஷ்ணுவின் ப்ரேரணை அனுகூலமாய் இருப்பதாய் எண்ணுகிறான். இப்பேர்ப்பட்ட அறிவால் உயர்ந்ததான விஷ்ணு லோகத்தை அடைகிறான். அக்ஞானிகளான ஜனங்களோ தெய்வம்தான் கர்மத்தைச்செப்வதாயும் தமக்கு கர்த்திருத்வமில்லை என்றும் அறிந்து தமக்கு விஹிதமாயுள்ள கர்மாவை விட்டு தாமஸ கதியை அடைகின்றனர். ஆகையால் ஜீவனுக்கு கர்த்தவமிருப்பதாலும் விகிதமான கர்மாவை விடுவதால் துர்கதி இருந்துவருவதாலும் ஒவ்வொருவரும் தனக்கு விகிதமான கர்மாவை அவசியம் செய்யவேண்டும். ஜீவனிடம் இருந்துவரும் கர்த்திருத்வம் அஹம்கரோமி நான் செய்கிறேனென்று எண்ணும் ஸாக்ஷி ப்ரத்யக்ஷத்தாலும், குர்வன்னேவேஹ கர்மாணி என்ற வேதத்தாலும், ஸுக துக்கங்களை அனுபவிக்கும் தன்மை இருப்பதால், கர்த்ருத்வம் உண்டு என்ற அனுமானத்தாலும், எப்படி சித்திக்கிறதோ, அப்படி ஜீவனிடமுள்ள கர்த்ருத்வம் ஈசுவராதீனம் என்று யோகிகளின் ப்ரதக்ஷயத்தாலும், நரிதேதத்வத்க்ரியதே என்ற வேதத்தாலும், ஜீவனுடைய கர்த்ருத்வம்ஈசுவரனின் அதீனம் ஏன்? அது காரியமாயிருப்பதால், என்ற அனுமானத்தாலும் சித்திக்கிறது. ஆதலால் ஞானியாயிருப்பவன் ஜீவனுக்கு கர்த்ருத்வத்தையும் அந்த கர்த்ருத்வத்திற்கு ஈசுவராதீனத்வத்தையும் இவை இரண்டையும் விடக்கூடியதாய் இல்லை என்று அறிந்து தனக்கு விஹிதமான கர்மாவைச் செய்கிறான். ஜீவனுடைய கர்த்துவத்திற்கு விஷ்ணு ப்ரோதகன் என்று அறிந்து விஹிதமான கர்மாவைச்செய்யும் புருஷன் ப்ரத்யக்ஷம் ஆகமம் அனுமானம் இந்த மூன்று பிரமாணங்களையும் அனுஸரித்தவனாகிறான். ப்ரத்யக்ஷாதி மூன்று பிரமாணங்களும் பரஸ்பரம் விரோதம்



இல்லாமல் ஓர் அர்த்தத்தில் பிரவிருத்திக்கும் பக்ஷத்தில் அது பூர்ணபிரமாண மென்று சொல்லப்படுகிறது. இந்த மூன்று ப்ரமாணங்களும் பாஸ்பரம் விரோதமில்லாமல் தனித்தனியான விஷயங்கள் சம்பந்தப்பட்டதாய் ஆகும்பக்ஷத்தில் அது மத்யம ப்ரமாணம் என்று சொல்லப்படுகிறது. ஒரே அர்த்தத்தில் இந்த மூன்று ப்ரமாணங்களும் பரஸ்பரம் விரோதமுள்ளதானால் அந்தப்பிரமாணம் அதமப்பிரமாணம் என்று சொல்லப்படுகிறது. இப்படி இருப்பதால் மூன்று ப்ரமாணத்தையும் விரோதமில்லாமல் ஒரே அர்த்தத்திற்கு சம்பந்தப்பட்டதாய்ச் செய்ய வேண்டும். விபரீத ஞானியாயிருப்பவன் ப்ரத்யக்ஷஸித்தமான ஜீவகர்த்ருத்வத்தைவிட்டு, தைவமே கர்த்தா என்று தெரிந்து கொண்டு தனக்கு விஹிதமாயுள்ள கர்மாவை விட்டுவிடுவான். ஞானியோ ஜீவனையும் அவனுடைய கர்த்ருத்வத்தையும் விஷ்ணுவின் ஆதீனமானதென்று தெரிந்துகொண்டு தனக்கு விஹிதமாயுள்ள கர்மாவைச்செய்வான். எல்லா ஜீவர்களிலேயும் அனாதியாய் சித்தமானதாயும் நாசமில்லாததாயும் ஸ்வபாவம் என்றும் ஹடமென்றும் பெயர் கொண்டதாயுமுள்ள யோக்யதை என்பது ஒன்று உண்டு. அது ஜீவர்களுக்கு அவர்கள் பலவகைப்ரயத்தினம் செய்வதற்கு முதற்காரணமாகும்: அநாதி அதிருஷ்டம் என்று சொல்லப்படும் அநாதி கர்மமானது இரண்டாவது காரணம். பௌருஷமென்று பெயர் கொண்ட ஜீவனுடையப்ரயத்தினம் மூன்றாவது காரணம். இந்த யோக்யதை முதலான இந்த மூன்று காரணங்களும் ஸம்ஸாரம் முதலான மூன்று அவஸ்தைகளிலேயும் விஷ்ணுவுக்கு ஆதினமானது. உத்தமர்களிலேயும் உத்தமனும் முக்ய ஸ்வதந்திரனுமுள்ள அந்த வாஸுதேவன் ஒருவருக்கும் ஆதீனனல்ல. மேற்கண்ட ஹடமென்று சொல்லப்படும் யோக்யதை பிரம்மாவைத் தொடங்கி கலிவரையில் எல்லோரிடமும் தாரதம்மியத்துடன் இருக்கிறது. ஹடத்தால் கர்மங்கள் உண்டாகின்றன. கர்மத்தால் புருஷப்பிரயத்தினம் உண்டாகிறது. புருஷப்ரயத்தினம் தான் யோக்யதை பூர்வகர்மம் இவைகளுக்கு சக்தியை வெளிப்படுத்துவதாகும். புருஷப்ரயத்தனமன்னியில் ஹடமும் பூர்வகர்மமும் பலனைத்தராது. வாஸு

தேவனுக்கு ஸ்வதந்திரியமிருப்பதாலும் ஹடாதிகளுக்கு ப்ரேரக
ராய் இருப்பதாலும் அவர் ஹடாதிகளுக்கு பலனைக் கொடுக்கக்
கூடியவராகிறார். அந்த விஷ்ணு தனக்கு ஸர்வ ஸ்வாதந்திரமிரு
ந்தபோதிலும் இந்த ஹடாதிகளைப் பார்த்தே ஜீவனுக்கு பலனைத்
தருகிறார். இந்த ஹடாதிகளை எதிர்பார்த்தே நான் ஜீவனுக்கு
பலனைத்தருகிறேன் என்று ஈசுவரனுக்கு ஸங்கல்பம் இருந்து வரு
வதால் அந்த விஷ்ணுக்கு ஸ்வதந்திர கர்த்ருத்வம் என்பது விலகி
ப்போய் விடாது. இந்த விஷ்ணு ஸர்வ சிருஷ்டி முதலான கர்த்
ருத்வ விஷயத்தில் சக்தியுள்ளவராதலால் அவருக்கு எந்த விஷயத்
திலேயும் அஸாமர்த்தியம் என்பது இல்லை. ஜீவனுக்கு அஸ்வதந்
திரமான சர்த்ருத்வம் இருப்பதால் அந்தவிஷ்ணு, சுருதிஸ்மிருதி
கள் மூலம் ஏற்படுத்தியிருக்கும் அவனவனுடைய வர்ணாசிரமோசி
தமான கர்மத்தை விஷ்ணுவின் பூஜார்த்தமாய் அவசியம் செய்ய
வேண்டும். அதை பூஜா ரூபமான கர்மத்தால் விஷ்ணுப்ராப்தி
யும் உண்டாகிறது. இதற்கு மாறாய் விஹிதமான கர்மத்தைச்
செய்யாமல் நிஷித்தமான கர்மாவைச் செய்தால் எவ்வகையிலும்
நரகம் வந்தே தீரும். விஷ்ணுவின் முகத்தினின்றும் ப்ராம்மண
ஜாதி பிறந்ததால் விஷ்ணு பிராம்மணனுக்கு வாயினின்றும் உண்
டாகும் கர்மாவைக் கொடுத்தார். அதனால்தான் ப்ராம்மணனு
க்கு அத்யயனம் செய்வது விஹிதமான கர்மம் என்று சொல்ல
ப்பட்டிருக்கிறது. விஷ்ணுவின் புஜங்களினின்றும் க்ஷத்திரி
யன் பிறந்ததால் பாபத்தைத் தடுப்பதும் வைஷ்ணவ தர்மத்தை
ப்ரவிர்த்திப்பதும் ஆகிய இந்த ரூபமான புஜகாரியங்களை விஷ்ணு
க்ஷத்திரியனுக்குக் கொடுத்தார். முகமும் புஜமும் சமீபத்திலிருப்
பதால் ஜபம் உபதேசம் இவைகளையும் க்ஷத்திரியனுடைய தர்ம
மாக விஷ்ணு ஏற்படுத்தினார். பிராம்மணனுக்கு பாஹுவின் கர்ம
மாகிய யக்ஞத்தையும் தர்மமாகச் செய்தார். வைசியன் விஷ்ணு
வின் துடையினின்றும் பிறந்ததால் துடையின் காரியமாகிய
ப்ரஜா விர்த்தியாகிய ப்ரஜைகளை உண்டாக்குவது வைசியனுடைய
தர்மமாகும். ப்ரஜைகளுக்கு சமானமாயுள்ள பயிர் முதலியவை
களுக்கு விருத்தி உற்பத்தி செய்வது முதலியவைகளால் ஏற்படு
வதால் பயிர் முதலியவைகளின் விருத்தி வைசியனுடைய தர்ம



மாயிற்று. கைகள் துடைகளின் சமீபத்திலிருப்பதால் வைசிய
னுக்கு கைகளின் காரியங்களான பயிர் செயல் வியாபாரம் முதலிய
காரியத்தையும் தர்மமாய்ச் செய்தார். விஷ்ணுவின் பாதத்
தினின்றும் சூரன் பிறந்தான். அவனுக்கு கால் நடை ப்ர
தானமாயுள்ள ஸேவக ரூபமான காரியம் தர்மமாகும்.
கைகளும் கால்களும் விரல்களைக் கொண்டிருப்பதன் காரணமாக
ஸமானங்களாய் ஆவதால் கைகளால் உண்டாகும் பயிர் செயல்
வியாபாரம் முதலியவைகள் சூத்ரனுக்கு தர்மமாகிறது. துடை
களும் கால்களும் சமீபத்திலிருப்பதால் துடையின் காரியமான
ஸந்தான விர்த்தியும் சூத்ரனுக்கு தர்மமாகிறது. புஜமும் மார்பும்
பலத்திற்கு ஸ்தானமாகிறது. மனஸு க்ஞானத்திற்கு ஸ்தான
மாகிறது. ஆகையால் க்ஷத்திரியனுக்கு பலமும் ஞானமும் இர
ண்டும் தர்மமென்று சொல்லப்பட்டிருக்கிறது. கையின் வேலைப்
பாடு காரியங்களின் திறத்தைக் காட்டுகிறது. ஆகையால் கைகள்
துடைகளுக்கும் பாதங்களுக்கும் ஸமீபத்தில் இருப்பதால் வைசி
யர்களும் சூத்ரர்களும் கர்மாவைசெய்வதில் திறமைவாய்ந்தவர்களா
வார்கள். இப்பொழுது சொன்ன விசேஷ தர்மம் பிராம்மணரு
க்கு முக்யமாய்ச் சொன்னேன். அமுக்யமானதென்று பின்னடி
சொன்ன எல்லா தர்மமும் எல்லா வர்ணத்தார்களுக்கும் உண்டு.
நாங்கள் தேவாம்சர்களாயிருப்பதால் எங்களுக்கு நீசஸேவைத்
தவிர்த்துள்ள எல்லா கர்மங்களும் தர்மமாய் ஆகிறது. விஷ்ணு
வால் ஆதிசிருஷ்டியில் சிருஷ்டிக்கப்பட்டவர்களான எல்லா வர்
ணத்தார்களும் விஹிதமான தர்மங்களைச் செய்து விஷ்ணுவையே
பூஜை செய்ய வேண்டும். விஷ்ணு பக்திதான் எல்லோருக்கும்
தர்மம். யோக்யதைக்குத் தகுந்தபடி விஷ்ணுவின் ஞானம் தான்
விஷ்ணு பூஜையாகிறது. விஷ்ணு தான் எல்லோருக்கும் தந்தை,
குரு, முக்யமான தெய்வம். ஆகையால் அவர் தான் முக்யமாய்
பூஜிக்கத் தகுந்தவர். அவரிடம் பக்தியுள்ளவர்களாதலால் தேவர்
களும் பூஜிக்கத் தகுந்தவர்களாகின்றனர். மகாலட்சுமி முதலான
தேவர்களில் விஷ்ணுவிடம் அத்யந்தமான பக்தர்கள் யாரோ அவர்
கள் விசேஷமாக பூஜ்யர்களாகின்றனர். விஷ்ணுவை பூஜை செய்
தால் அவர் மோக்ஷத்தைத் தருகிறார். அவரை பூஜிக்காமலிருந்

20872



தாஸ்[illegible]மைய தருகிறார். ஸ்வதந்திரனானதால் அவர் ஸாதக[illegible]த்தைத் தருகிறவர். மற்றவர் ஸ்வதந்திரன் அல்ல. எல்லா ஜீவர்களும் விஷ்ணுவின் ஆதீனர்கள். அவர் ஸ்வதந்திரனானதால் ஸாதகம் நிர்தோஷமான ஞானம் சக்தி முதலிய எல்லா குணங்களாலும் அவர் பூர்ணர்; ஸமஸ்த தோஷங்களுமில்லாதவர். எல்லையில்லாத சக்தியுள்ளவராதலால் அவர் ஸ்வதந்திரர். தோஷமில்லாமல் செய்து கொள்ளவும் தன்னை குண பூரணனாய்ச் செய்து கொள்ளவும் அவருக்கு வல்லமை கரைகடந்து இருப்பதால் அவர் சகல கல்யாண குண பூர்ணர். ஸர்வதோஷங்களுக்கும் தூரனாய் இருக்கிறார். அப்பேர்பட்ட நாராயணர் தம்தம் வர்ணாசிரம கர்மங்களால் அதிகமாய் பூஜிக்கப்படுகிறார். ஆகையால் துஷ்டஜனங்களிடம் விசேஷமான கடிமைசெய்வது எங்களுக்கு தர்மமாகாது. துஷ்ட ஸம்ஹாரம் அவசியம் செய்யவேண்டும். யார் யுத்தத்திற்கு வந்த துஷ்ட க்ஷத்திரியர்களை ஹரிபூஜை என்று நினைத்துக் கொண்டு தன் பாஹுவீரியத்தால் ஸம்ஹாரம் செய்கின்றாரோ அவனுடைய சரீரத்துடன் கூடி அந்த புஜங்கள் மோக்ஷத்தில் ஞானாத்மகமாய் ஆகிறது. பாபம் அதிகமாயுள்ளவராயுமுள்ள மிக்க பலிஷ்டர்களான ஜனங்களை ஸம்ஹாரம் செய்தால் மோக்ஷத்தில் அதிகமான ஆனந்தத்தின் விருத்தி ஏற்படுகிறது. விஷ்ணுக்கு உத்தமமான ப்ரீதி உண்டாகிறது. ஆகையால் பாபிகளை எல்லா வகையிலும் கொல்ல வேண்டும். யார் சொக்கட்டானாட்டத்தில் வஞ்சனை யுள்ளவர்களோ, யார் யுத்தத்தில் கையில் அகப்பட்டிருக்கின்றனரோ, அவர்களை தன் ஆட்களைக்கொண்டு அவசியம் கொல்ல வேண்டும். அரசனோ அரசனுடைய மகனோ அரசனுடைய தம்பியோ யுத்தத்திற்கு வந்து சேர்ந்தால் அவனை தன் கையால் கொல்ல வேண்டும். அரசனுடைய மகனுக்கு விவாகமாகாமலிருந்தால் அவனை இதரர்களால் கொல்லச்செய்ய வேண்டுமேயல்லாது தானே கொல்லக் கூடாது. தர்மத்திற்கு ஸாதனமாயிருந்தாலும் தூஷிக்கப் படுவதாயுள்ள ஸ்திரீ வதம் முதலான காரியங்களை இதரர்களைக் கொண்டு செய்ய வேண்டும். க்ஷத்திரியர்கள் அவைகளை தாமே செய்யலாகாது. இவ்வாறு எங்களுடைய தர்மம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பாஞ்ச



ராத்திராகமத்தில் இவ்வாறே வேதவியாஸரின் வாக்யமும் இருக்கிறது. சொக்கட்டானாட்டம் என்பது வஞ்சனை ரூபமானது. பாபத்திற்கு ஸாதனமாகும். மிகவும் நிந்திதமானது. அந்த த்யூதத்தை நீ சகுனியுடன் ஆடினாய். இப்பேர்பட்ட தான த்யூதத்தை ஆட வேதத்தில் விதியில்லை, ஆகையால் த்யூதத்தில் அபகரிக்கப்பட்டதாயுள்ள திரவியம் கொடுக்கப்பட்டதாய் போனதாய் வேதக்ஞர்கள் சொல்லமாட்டார்கள். பயந்தவன் கொடுத்தது, த்யூதத்தில் கொடுத்தது, வேசிக்குக் கொடுத்தது, இந்த திரவியங்களை திரும்பவும் அபகாரம் செய்யலாம். இப்படி வேதோக்தமான தர்மம் சாசுவதமாய் எப்பொழுதுமே இருந்துவருகிறது. த்யூதத்தில் ஸ்திரீகளிடம் சிறிது திரவியத்தைக் கொடுத்திருந்தால் அதை அபகரிக்கலாகாதென்று பெரியோர்கள் சொல்கின்றனர். ஆனால் அந்த திரவியம் அந்த ஸ்திரீயின் பந்து ஜனங்களுக்கு கேவலம் அனுபவிக்கத் தகுந்ததாய் மட்டில் இருக்கும் பக்ஷத்தில், அவ்வாறு அனுபோகத்திற்கு அருகமானதான புஸ்தகம் ஸாலக்ராமாதிகள் போன்ற அந்த திரவியத்தை ஸ்திரீக்கு அவளுடைய காமுகன் கொடுப்பதைத் தடுக்க அந்த காமுகனுடைய பந்து ஜனங்களுக்கு சக்தி இல்லாமலிருந்தால், அந்த ஸ்திரீயை ஸமாதானம் செய்து இந்த திரவியத்தை உன்னுடையதாகவே நான் அனுபவிக்கிறேன், அதைக்கொடு, என்று அவளிடமிருந்து அந்த திரவியத்தை அபகரிக்கலாம், என்றிவ்வாறு தர்மம் இருப்பதால், நாங்கள் நீர் கொடுத்துவிட்ட ராஜ்யத்தை துரியோதனாதிகளிடமிருந்து அபகரிக்கலாம். அரசனே! நீர் தர்மத்தில் நிலையுள்ளவர் என்றும் தமையனார் என்றும் நினைத்து உங்கள் ஆக்ஞையில்லாமல் அந்த ராஜ்யத்தை அபகாரம் செய்யவில்லை. நீர் இப்பொழுது ஆக்ஞை செய்யும் பக்ஷத்தில் துரியோதனாதிகளை இப்பொழுதே கொன்று உம்மிடம் ராஜ்யத்தை நன்றாய் ஸ்தாபிக்கிறேன். பாபிஷ்டர்களிடமும் ஸத்யத்தை நடத்த வேண்டும் என்று உமக்கு விருப்பமிருந்தால் அதன்படிக்கும் எங்களுக்கு பன்னிரண்டு மாஸம் வனவாஸம் ஆகிவிட்டது. வேதத்தில் ஆயிரம் வருஷம் செய்யவேண்டிய தான ஸத்ரம் என்னும் யாகம் சொல்லப்பட்டிருக்கிறது. வேதம் பிரமாணமாய் இருப்பதால் மனுஷ

யர்களுக்கு ஆயிரம் வருஷம் ஆயுஸ் இல்லாதிருப்பதைக்கொண்டு ஒரு வருஷத்திற்கு பதிலாய் அதன் ஸ்தானத்தில் ஓர் மாஸத்தை வேதக்ஞர்கள் வைத்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு பார்த்தால் பன்னிரண்டு மாஸங்கள் வனவாஸம் செய்திருப்பதால் பன்னிரண்டு வருஷங்கள் வனவாஸம் செய்து விட்டதாய் ஆகிறது. ஒரு மாஸம் அக்ஞாத வாஸம் செய்துவிட்டு பிறகு சத்ருக்களை ஸம்ஹாரம் செய்து ராஜ்யத்தை ஸம்பாதித்துக் கொள்வோம். அரசனே! நீர் சத்ருவுக்கு துக்கத்தை தருபவராயும் கஷ்டத்தை அனுபவிப்பதால் சத்ருக்களுக்கு ஆனந்தத்தை தருபவராயும் ஆகாதீர். சத்ருக்களின் சிரஸ்ஸின் மீது ஜ்வலித்திருங்கள். சிநேகிதரை ஸந்தோஷப் படுத்திக்கொண்டு எப்பொழுதும் ஸ்ரீ கிருஷ்ணரை பஜனம் செய்யுங்கள். தர்மபுத்திரரே! ஸ்ரீ கிருஷ்ணர் பிரம்மாதிகளின் வரத்தால் ஜயிக்கமாளாதவர்களாகிய ஜராஸந்தாதிராஜர்களையும் ருத்திராதி தேவர்களையும் ஜயித்ததால் ஸ்ரீ கிருஷ்ணருக்கு சுவாதந்திரிய மென்பது ப்ரத்யக்ஷமாய் தற்போதுள்ள ஜனங்களால் காணப்பட்டிருக்கிறது. லக்ஷ்மீதேவியும் பிரம்மாதி தேவர்களும் விஷ்ணுவுக்கு அதீனர்கள் என்னும் ப்ரமேயம் பலதடவை ஸ்ரீ வேதவியாஸரின் சரீரத்தில் எங்களால் காணப்பட்டிருக்கிறது. பராசரரின் பிள்ளையான ஸ்ரீ வேதவியாஸர் எங்களுக்கு திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து ஸமஸ்த உலகிலும் தனக்கு இருந்து வரும் ஸ்வாதந்திரியத்தைக் காட்டியிருக்கிறார். விஷ்ணுக்கு ஸ்வதந்திர கர்த்ருத்வமும் எங்களுக்கு அஸ்வதந்திர கர்த்ருத்வமும் இருந்து வருவதால், அரசனே! எல்லா சத்ருக்களை கொல்வதற்காகவும் சக்ரவர்த்தி பதத்தை அனுபவிப்பதற்காகவும் புறப்படு. அரசனே! நீ இப்படி செய்தால் ஸ்ரீ கிருஷ்ணரின் அருளால் மகத்தான கீர்த்தியும் மங்களமும் உனக்கு உண்டாகின்றன. என்றிவ்வாறு பீமசேனன் சொல்லவும் தர்மபுத்திரர் நான் பதின்மூன்று வருஷம் ஆனபின் நீ சொன்ன துஷ்ட நிக்ரஹத்தைச் செய்கிறேன். இந்த என் வாக்யம் ஸத்யமே. ஸந்தேகப் படாதே. என்னை நான் தொட்டுக்கொண்டு பிரமாணமாய்ச் சொல்லுகிறேன் என்று சொன்னார்.

ஹடவாதமுடிந்தது. (தொடரும்.)



# சங்கரலீலா விலாஸம்.

(முன் 319-ம் பக்கம் தொடர்ச்சி)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்பு ராவ் M.A., எழுதுவதாவது:—

இவருடைய அட்டகாசம், தைரியப்பேச்சு, சொல் அழகு இவைகளைப் பார்த்துவிட்டு ஆசாரியாள் ஏதோ அகண்டிதமான வாக்யார்த்தத்தைச் சொல்லிவிட்டார்; அத்வைதம் வேதாந்த ஸாம்ராஜ்யத்தில் சக்ரவர்த்தி பதவியை அடைந்துவிட்டது. என்று எண்ணி மூட ஜனங்கள் மோசம் போகின்றனர். ஸமஸ்த அத்வைத பண்டிதர்களும் இந்த உபதேசத்தில் எல்லா தத்வங்களும் அடங்கி கிடப்பதாய் அறிந்திருக்கின்றனர். பெரியதொரு விருக்ஷம் அணுவான பீஜத்தில் அடங்கியிருப்பதுபோலும், ஸமஸ்தமான வேதங்களும் ப்ரணவத்தில் அடங்கியிருப்பதுபோலும், அநந்த கோடி ப்ரம்மாண்டங்கள் தாமோதரனுடைய வயிற்றில் ஓர் பாகத்தில் அடங்கியிருப்பதுபோலும், எல்லாதீர்த்தங்கள் கங்கையில் இருந்துவருவதுபோலும், எல்லா கர்ம பலன்களும் ஞான பலத்தில் அடங்கியிருப்பதுபோலும் தத்வ விவாதத்தில் கிளம்பும் எல்லா அஸத்திய ப்ரவாகம் சங்கராசாரியாரின் வியாவஹாரிகம் பாரமார்த்திகமென்று பேதகல்பனையாகிய மிருஷா ஸமுத்திரத்தில் அடங்கியிருக்கிறது, இரவும் பகலும் பிரம்ம விசாரத்தில் மூழ்கி மூளையை செலுத்தாவிடில் இந்த மோசடியை கண்டுபிடிப்பது கஷ்டம் அல்லது திருடர்களைப்பிடிக்க மாறுவேடம் போட்டுக்கொள்ளும் போலீஸ் அதிகாரியைப்போல் நாம் அத்வைதியாகவே ஆகிவிட்டு தன்மயனாகவே மாறிப்போய் அதன் ஸ்வாரஸ்யத்தைத் தெரிந்தால்தான் அதன் ஸ்வரூபம் வெளியாகும்.

இந்த வாதம் எவ்வளவு அசிங்கமாய் இருக்கிறதென்பதை ஓர் திருஷ்டாந்தத்தால் காட்டுகிறேன். நாலும் மூணும் ஏழு என்றும் இது எப்பவும் மாறாதென்றும் இதைவிட தனியாக வேறொரு தத்வமும் இல்லை என்றும் கணக்கு வாத்தியார் சொல்லவும், பையன், "ஸார், என் முத்தண்ணா நாலும் மூணும் பத்து என்றாரே! அதற்கென்ன வழி, முத்தண்ணாவின் வார்த்தையை நான் எப்படி மீறுவது" என்று கேட்டான். சங்கராசாரியாரின் தத்வப்யாசத்தில் சிக்ஷையடைந்திருக்கும் அந்த குரு உடனே தடையின்றி "ஆம், அது வாஸ்தவம்

தான். பந்தாட்டத்தில் நாலும் மூணும் பத்தாகிறது. பள்ளிக்கூடத்தில் நாலும் மூணும் ஏழுதான் நிஜ தத்வம் என்று பதில் சொன்னார்.'' அதன் மேல் பையன் ஸார் நான் இப்போது என்ன சொல்வது சொல்லி விடுங்கள் என்றான். அதற்கு வாத்தியார் இப்போது என்ன செய்கிறாய் சொல் என்றார். பையன் பதில் சொன்னதாவது, என் சட்டைப்பையிலுள்ள பட்டாணிக்கடலையை தின்று தீர்ந்துபோய்விட்டது. இனி நான் கணக்குச்சொல்லமாட்டேன். விளையாடத்தான் போகப்போகிறேன் என்றான். அதற்கு உபாத்தியாயர் உடனே அவனைத்தட்டிக்கொடுத்து அப்படியானால் இப்பொழுது நீ நாலும் மூணும் பத்து என்று தெரிந்துகொண்டதுதான் சரி என்று சொன்னார்.

இப்படித்தான் சக்கராசாரியாருடைய தத்வமிருக்கிறது. ஜகத் மித்யையாயிற்றே, அதனால் இது பின்னாடியும் இல்லை, இப்பொழுதும் இல்லை, இனியும் இருக்கப்போவதில்லை என்று ஆகிறதே, இப்படி இருக்கையில் இப்பொழுது கர்மாதிகள் செய்ய முடியாமற் போகிறதே என்று சூக்ஷ்மத்தைத் தெரிந்துகொள்ளாமல் கர்மாதிகளைச்செய்து கஷ்டப்பட விரும்பும் ஓர் பட்டவர்த்தன சாஸ்திரி சங்கராசாரியாரை ப்ரச்னம் செய்தார். இந்த ப்ரச்சனத்தையே ஆப்த சிஷ்யர்களான பத்மபாதர் தோடகாசாரியார் முதலியோர் கேட்டிருந்தால் ''சும்மா இரு. இல்லை என்று நான் சொல்லிவிட்டபிறகு. அது இல்லைதான். என் தோட்டத்தில் கத்தரிக்காய்களை எவ்வளவு எண்ணினாலும் அது ஒரே கத்திரிக்காய்தான். பேதமில்லவே இல்லை. காரியத்திற்கு வராத கர்மாதிகளைச்செய்யும் பிரயாசை மூடர்களுக்கு இருக்கட்டுமே. என் சிஷ்யனாய் ஞானவான்களான உங்களுக்கு ஏன் இந்த கர்மாதிகளைச் செய்யும் பிரயாசை என்று சொல்லியிருப்பார். இந்த பட்டவர்த்தனமடி ஸஞ்சிசாஸ்திரி கர்மத்தைவிடு என்ற வார்த்தையைக்கேட்டு திருப்தியடைய மாட்டாராதலால் தன் சித்தாந்தத்தையும் விடாமல் இந்த சாஸ்திரிக்கும் குல்லாய்ப்போட்டுவிடவேண்டும் என்று இருவரும் தலை தூக்கச்செய்ய ஓர் கல்பனையைச் செய்தார் அது என்னவென்றால் ஹே தீக்ஷிதரே? நம்மை அவைதிகர்களென்று எண்ணினீர்களா? ஜகத்து அஸத்யம்தான், ஆயினும் மலடி மகன்போல் அப்பேர்ப்பட்ட அஸத்யமானதல்ல, வியவஹாரிகமாய் அது அத்யந்தம் ஸத்யமே ஆகும். ப்ரம்மம் பாரமார்த்திகமாய் அத்யந்தம் ஸத்யம்தான். ஆகையினாலே தயம் ஸத்யமே வ்யவஹாரிகமான கர்மங்களைச் செய்து வ்யவஹாரிகநிலை ஞானத்தை ஸம்பாதித்து வ்யாவஹாரிகலோகத்தை அடையுங்கள் பிறகு உங்கள் பிரம்மத்வம் உங்களுக்கு கிடைக்கும். நீங்கள் ஸர்வமானியர்களா



என்ன என்று சங்கராசாரியார் சமத்காரமாய் பேசினார். தீக்ஷிதர்வான் மகா சந்தோஷமடைந்தார். உண்மையான தத்வம் யாதென்றால் வியாவஹாரிகமென்றால் மித்யாபூதம் என்றாகும், என்றால் அத்யந்தம் பொய்யான என்று அர்த்தம், என்றால் இல்லாமல் இருக்கிற என்று அர்த்தம். ஸத்தா என்றால் இருக்கிற என்று அர்த்தம், ஆக ஜகத்துக்கு வியாவஹாரிக ஸத்தா உண்டு என்றால் இல்லாமலிருக்கும் இருப்பு உண்டு என்று அர்த்தமாகிறது. இதனால் வ்யாவஹாரிக ஸத்தா என்பதற்கு இல்லவே இல்லை என்று அர்த்தமாகிறது. கர்மம் செய்வதில் மூடனாயிருக்கும் தீக்ஷதருக்கு இது எப்படி அர்த்தமாகக்கூடும். நாம் எங்கள் தெய்வமான நரஸிம்ஹனின் பாதத்தில் தலையை முட்டிக்கொண்டு இந்த அர்த்தத்தை அறிந்துகொண்டோம். பொய்பேசும் காலத்தில் நாலும் மூணும் பத்து என்பது உண்மை. உண்மை பேசும் காலத்தில் நாலும் மூணும் ஏழு என்பது உண்மை என்று சொல்வதுபோல் இந்த ஸத்தா பேதத்தை கல்பித்துக்கொண்டிருப்பது மிகவும் பரிகாசத்திற்கு ஆஸ்பதமான சில்லரை விஷயமாகும். வியபிசார கலத்தில் பரஸ்த்ரீகமனம் தர்மமாகிறது, புராணம் சொல்லும் காலத்தில் இது அதர்மமாகிறது என்று சொல்வது போலவும், ஸுராபானம் செய்த காலத்தில் கள்ளைக்குடிப்பவன் புத்தியுள்ளவனென்றும் பிரக்ஞையுடனிருக்கையில் அவ்வாறு கள்ளைக்குடிப்பவன் உன்மத்தன் என்ற சொல்வதுபோலவும் ஆகிறது.

பொய்பான விவக்ஷையின்படி (அதாவது Point of view-படி) பந்து தட்டையாய் இருப்பதாய் ஆகிறது. உண்மையான விவக்ஷையின்படி பந்து உருண்டையாயிருப்பதாய் ஆகிறது. இரண்டு விவக்ஷைகளின் கல்பனைகளை இனி எல்லா வியவஹாரங்களில் செய்யவேண்டியதாய் ஏற்பட்டு விட்டது. காரியத்திற்கு உதவாத இந்த இரு விவக்ஷைகளும் ஆபாஸமான கல்பனைகளாகின்றன. வேதாந்த ஸூத்ர பாஷியங்களில் மிக்க நிந்திதமான குசோத்யமான துச்சமான வாதமென்று எண்ணப்படுகிறது. ஓர் நியாதிபதி பிரதிவாதி ஸத்யம் பேசுகிறவனா அல்லவா என்று சாக்ஷியை விசாரித்தால் அப்பொழுது ஸாக்ஷி, பொய்யான விவக்ஷையின்படி (Point of view-படி) பார்த்தால் அவன் ஸத்யவான்தான்; உண்மையான விவக்ஷையின்படி அவன் ஸத்யவானல்ல என்று சாக்ஷி சொன்னால் மூடனென்று யார்தான் சொல்லாதிருப்பார்கள். இந்த வாதம் அநேகமாய் எல்லா நூலாசிரியர்களாலும் கண்டிக்கப்பட்டிருக்கிறது. உதாஹரணமாய் ஓர் நூலாசிரியர் எழுதியிருப்பதை இங்கு காட்டுகிறேன்.

"Sankara argues from both standpoints without much regard for consistency."

L. D. BARNETT, M. A. L. L D.,

இதன் பொருள்:— சங்கராசாரியார் ந்யாயத்திற்கு ஒத்துமையில்லாமலேயே இரண்டு விவக்ஷைகளையும் கைபிடித்து வாதம் செய்கிறார்.

இப்படி வாதிப்பதால் வேதத்தில் சொல்லியுள்ள பரப்ரம்மத்தின் எல்லா குணங்களையும் பரபிரம்மத்தினிடமிருந்து சங்கராசாரியார் பிடுங்கிவிட்டதாய் ஆயிற்று. "வேதத்தில் பரபிரம்மத்திற்கு அநந்த குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவே. சங்கராசாரியாரும் அதை ஒப்புக்கொள்கிறார். ஆயினும் வியாவஹாரிக விவக்ஷையின்பேரில். அதாவது பின்னாடியும் இருக்கவில்லை, இப்போதுமில்லை, இனியும் இருக்கப்போவதுமில்லை என்ற விவக்ஷையின்பேரில் வேதங்கள் பிரம்மத்திற்கு இந்த குணங்களை சொல்லியிருக்கின்றனவென்று சங்கராசாரியார் அர்த்தம் செய்துவிட்டாரே? இது முன்னாடி சொன்னதற்கு முறண்படுகிறதே, இது பித்தனுடைய பிதற்றலாகுவதில்லையா "என்று ஓர் பட்டவர்த்தன தீக்ஷிதர் கேட்டால் அதற்கு சில அத்வைதிகள் முன்னாடி வந்து இவ்வாறு சொன்னார்கள். "நாம் என்ன செய்வது, வேதங்களே இவ்வாறு இருக்கின்றன." என்று சொல்லி தங்கள் மனதில் ஏற்பட்ட தோஷங்களை வேத வாக்யங்களில் ஆரோபணம் செய்திருக்கின்றனர். இதனால் பரபிரம்மத்தின் சிருஷ்டிகர்த்ருத்வாதி குணங்கள் பொய்யான விவக்ஷையின்படி சொல்லப்பட்டிருக்கின்றன என்று சொன்னதைக்கொண்டு பரபிரம்மத்தின் குணங்களை அபகரிப்பதான ஓர் வஞ்சனை ஏற்பட்டது. மேலும் வேதம் பித்தனின் பிதற்றல் போலுள்ள குச்சிதமான வாக்யங்கள் நிறைந்தவைகள் என்ற அபிப்பிராயத்தை பிரசாரம் செய்திருப்பதால் வேதத்தின் கௌரவத்தை ஸம்ஹாரம் செய்ததான மற்றொரு பெரும் வஞ்சனையும் வெளியாகிறது.

(8) மேலும் பரப்ரம்மம் ஒன்றே ஸத்யமானால் ஜகத்து இல்லவே இல்லை என்றுதானே ஏற்படுகிறது. அப்படியானால் ஜகத்து முயற்கொம்புபோல் அஸத் ஆகிறதே என்று தூஷணையை எடுத்துச் சொன்னால், சங்கராசாரியார் அதற்கு ஜகத்து அஸத்யமில்லை ஜகத் ஸத்யமானதுதான் என்று சொல்வார். ஜகத் ஸத்யமானால் பரப்ரம்மம் ஒன்றே ஸத்யமென்பது எப்படி ஆகுமென்று, வைதீக பிச்சு கேட்டால் ஜகத் ஸத்யமானதில்லை, ஆனால் அது ஸத்விலக்ஷணம் என்பார், இதனால் ஜகத் ஸத்யம் ஸத்யமல்ல ஜகத்து அஸத்யம் அஸத்யமல்லவென்று இரண்டு விரோதங்கள் ஏற்பட்டன. இதற்காக சங்கராசாரியார் ஜகத்து ஸதஸத்விலக்ஷணமென்ற சொல்லிவிட்டார். வைதிகப் பிச்சு இந்த காதுக்கினிமையான வார்த்தையை கேட்டுவிட்டு சந்தோஷமாய் திரும்பிவிட்டார். சங்கராசாரியாரின் அபிப்பிராயம் யாதென்றால் ஜகத்தின் விஷயம் எனக்குத் தெரியும். நீங்கள் கேட்க வேண்டியதில்லை என்று. இந்த விஷயத்தை ஸ்பஷ்டமாய் அவர் சொல்லிவிட்டால் அந்த வைதீகப் பிச்சுக்கு குருவிடத்தில் அவிசுவாசம் ஏற்பட்டுவிடும், ஆதலால் அவர் இந்த கல்டனையைச்செய்தார்.

(தொடரும்.)



# எமது ஜார்ஜ் மன்னரின் வெள்ளித் திருவிழா.

இப்பாரத பூமியை ஆளும் எமது மாக்ஷிமை தங்கிய மகாராஜசக்ரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் பூபதி ஸமஸ்தகண்டங்களிலுள்ள ப்ரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இங்கிலாந்தில் பட்டாபிஷேகமடைந்து இன்றைக்கு ஸரியாய் இருபத்தைந்து வருஷமாவதால் 6—5—35 லன்று உலகில் எல்லா இடங்களிலும் ஸில்வர் ஜுப்லி என்னும் வெள்ளித்திருவிழா மிக்க ஆனந்தகரமாய்க் கொண்டாடப்பட்டது. இந்நகரிலும் ஓர் பிரபல கம்மிட்டியின் ஆதீனத்தில் சப்கலெக்டர் துரையவர்களின் முன்னிலையில் பையன்களுக்கு தின்பண்டமளித்தல், விளையாட்டுத்தோட்டம் திறந்துவைத்தல், ஏழைமக்களுக்கு அன்னமிடல் முதலியவைகள் நடந்ததுடன் அன்றிரவு இதுவரை இந்நகரில் பார்த்திராதபடி அவ்வளவு மனோகரமான ரீதியில் சக்ரவர்த்தி தம்பதிகளின் திருவுருவப் படம் ஊர்வலம் நடத்தப்பட்டது. மறுநாள் திவான்பகதூர் ஸ்ரீமான் V.K. ராமானுஜாசாரியார் அவர்களின் அக்கிராஸனத்தில் இவ்வூர் வாசிகளின் பெரியதொரு மகாநாடு கூடி பலவாழ்த்துக் கவிகளுடன் பிரிட்டிஷ் ஆட்சியின் குணாதிசயங்களைச் சொல்லி ராஜவிசுவாசத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவ்வானந்தக்கொண்டாட்டத்தில் எமது மித்திரனும் கலந்து தனது கடமையைச் செலுத்த உற்சாகப்படுகிறது. அதுவே தீவிர வர்ணாசிரமதர்மிகளின் கடமையாகும். அரசனை ப்ரஜைகள் தாயாகவும் தந்தையாகவும் தம் குலதெய்வமாகவும் கொண்டாடவேண்டுமென்று எமது எல்லா சாஸ்திரங்களிலுமே வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இந்த பிரிட்டிஷ் அரசாட்சியில் யார் என்ன குறைகூறினும், அது எப்பேர்ப்பட்டதாயிருந்த போதிலும், நாம் செய்யவேண்டியதான வர்ணாச்சிரம தர்மங்களை நாம் நடத்த வொட்டாமல் இந்த ராஜாங்கத்தால் தடுக்கப்படவில்லை. ஐஹிகம் பாரத்ரிகம் ஆகிய இருவகை ஸுக ஸாதனங்களான தர்மங்களையும் நடத்த நாம் ஸ்வாதந்திரியம் பெற்றிருக்கிறோம். எமது புனிதமான

கோயில்களும் குளங்களும் மடாலயங்களும் மற்றும் புண்யப்ரதேசங்களும் தூஷிக்கப்படாமல் இதுவரை இருந்து வருகின்றன. "விவிருத்யயதா காமம் க்ருஹத்வாராணி சேரதே| மனுஷ்யா ரக்ஷிதாராக்ஞா ஸமந்தாத் அகுதோபயா:|| ஸ்திரியஸ்சபுருஷா மார்கே ஸர்வாலங்கார பூஷிதா:| நிர்பயா: ப்ரம்பத்யந்தே யதிரக்ஷதி பூமிப:| தர்மமேவ ப்ரதிபத்யந்தேந ஹிம்ஸந்தி பரஸ்பரம்|| அனுக்ரஹ்ணந்தி சான்யோன்யம் யதா ரக்ஷதி பூமிப:|| யதா ஹ்யனுதயோராஜன் பூதானி சசி சூர்யயோ:| ஏவமேவ வினாராக்ஞா வினச்யேயுரிமா: ப்ரஜா:" என்று மகாபாரதம் ராஜதர்மத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி பலவகை சௌகர்யங்களை நாம் அடையப்பெற்றிருக்கிறோம். எமது தர்மங்கள் வளர்ந்து வருகின்றன. அதற்கு அத்தாட்சியாக எமது தர்மத்தால் எமது தெய்வங்கள் ப்ரீதியடைந்து எங்களிடம் அனுக்ரஹம் செய்து வருவதை ப்ரத்யக்ஷமாய் காண்கின்றோம். பதினாயிரக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள நகை நாணயம் முதலிய சொத்துக்களை அதி பந்தோபஸ்தன்னியில் வைத்துக்கொண்டு பயமற்று நித்திரை புரிந்து வருகிறோம். நிர்வாபரண பூஷிதர்களாய் மகா ரூபவதிகளான எங்கள் யௌவன மாதர்கள் தம் தம் பாதிவ்ரத்யத்திற்கு பங்கமில்லாமல் சகாயமின்றி பயமற்று வெளியில் செல்கின்றனர். துர்பலர்கள் ப்ரபலர்களால் பகிரங்கமாய் ஹிம்சிக்கப்படுவதில்லை. பரஸ்பரம் குத்து வெட்டு முதலிய சண்டைகள் எங்கும் நிர்பயமாய் நடப்பதில்லை. சந்திர சூரியர்களின் உதயமில்லாமற்போனால் எவ்வாறு ஜனங்கள் கஷ்டப்படுவார்களோ அதுபோல் தார்மிகனான அரசன் சரியானபடி ஸம்ரக்ஷிக்காவிட்டால் பிரஜைகள் வருந்துவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறபடி, இந்த ஆளுகை இல்லாவிடில் நாம் மிகவும் வருந்துவோம் என்று எண்ணுவோர்கள்தான் ஏராளமாய் இருக்கின்றனர், என்பதை யாவரும் மறுக்கமுடியாது. இவ்வாறு பலவகை ராஜதர்மங்களைக் கைப்பிடித்து எங்களை ஆண்டு வரும் இந்த அரசன் எமது புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி விஷ்ணுவின் அம்சம் பெற்றவர் என்று நாம் திடமாய்ச் சொல்லலாம் என்பதே எமது துணிபு. அத்துடன் இந்திரன், சந்திரன், சூரியன், யமன், வாயு ஆக இந்த ஐந்து தேவர்களின் அம்சமும் அரசனிடம் இருந்துவருவதாய் மார்க்கண்டேய புராணம் ப்ரம்ம



வைவர்த்தம் ஸ்ரீமத் பாகவதம் முதலியதுகள் விவரித்துக்கூறுகின்றன. யஸ்தஸ்ய புருஷ: பாபம் மனஸாப்யனுசிந்தயேத்| அஸம்சயமிஹக்லிஷ்ட: ப்ரேத்யாபிநரகம்வ்ரஜேத்| நஹிஜாத்வவமந்தவ்ய: மனுஷ்ய இதிபூமிப:| மஹதீதேவதா ஹ்யேஷா நரரூபேணதிஷ்டதி" என்று அரசன் விஷயத்தில் மனதால்கூட கெடுதலை நினைப்பவன் இஹலோகத்தில் பலவகை ஸங்கடங்களை அனுபவிப்பதுடன், இறந்த பிறகும் மகா நரகங்களை அடைவான் என்றும், ஆகவே அரசனை, அவன் நம்மைப்போல் ஓர் மனுஷ்யன் தானே என்றோ அவன் ஜாதியைவிட தன் ஜாதிவிட உத்தமமென்றோ அல்லது வேறு எவ்வகையிலும் குறைத்துப் பேசியோ அவமானம் செய்யக்கூடாதென்றும் பல தேவர்கள் சேர்ந்து அரசனாகிய ஒரு மூர்த்தியாய் வந்திருக்கின்றனரென்றும் மகாபாரதம் கூறுகிறது. மேலும் விஷ்ணுபுராணத்தில் "யேபவிஷ்யந்தி யே அதீதா: ஸர்வபூதேசுவரா: திவஜ| தேஸர்வே ஸர்வ பூதஸ்ய விஷ்ணோரம்ஜா த்விஜோத்தம||" இந்த அகண்ட பரதபூமண்டலத்திற்கு சக்ரவர்த்தியாய் இப்போது இருப்பவர்கள், முன்னாடி இருந்தவர்கள், இனி இருக்கப்போகிறவர்கள், எல்லோருமே ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சர்கள், என்று ஸ்ரீவிஷ்ணுபுராணம் ஸ்பஷ்டமாய் அறிவிக்கிறது. மேலும் எமது பாரத சக்ரவர்த்தியாகிய மாக்ஷிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னவரின் சொந்த அபிப்பிராயமும், அவருடைய் பிதாமஹி, பாரத வர்ஷத்தின் குலதேவிபோன்ற ஸ்ரீமதி விக்டோரியா தேவியாரின் ஸன்மார்கத்தை அவலம்பித்து, பிரஜைகளின் உண்மையான பிரார்த்தனையை அறிந்து தர்ம மார்க்கத்தில் ஸம்ரக்ஷிக்க இருந்துவருவதாய் பல அத்தாக்ஷிகள் இருக்கின்றன. இவர் யுவசக்ரவர்த்தியாய் பல வருஷங்களுக்கு முன்பு இப்பாரத பூமிக்கு வந்து, கல்கத்தாவுக்கு விஜயம் செய்திருந்த சமயம், ப்ரஜைகளின் உண்மையான முறைப்பாடுகளை அறிய விரும்பி, அடுத்தடுத்து அடக்கு முறை சட்டத்துக்கு ஆளாகிக்கொண்டிருந்த பிரபல தேசிய பத்திரிகையான அமிர்த பஜார் பத்திரிகையை இரகசியமாய் இவர் எப்போதும் படித்திருந்தாராதலால், அதன் ஆசிரியருக்கு இரகசியமாய் உடனே வரும்படி இவர் சொல்லியனுப்பித்தார். ஆசிரியரும் அவ்வாறே வந்து சேர அரசனைக்கண்டவுடன் அவர் மேல்வேஷ்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு மூன்று தரம்

பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, கழுத்தில் புஷ்பமாலையை ஸமர்ப்பித்தார். அரசன் தன் பிரபல சத்ரு என்று தான் எண்ணியிருந்த இந்த ஆசிரியர் (சிசிர் குமார கோஸ் என்று ஞாபகம்) தன் காலில் விழுவதைப் பார்த்துவிட்டு மகா ஆச்சரியமடைந்து, இது என்ன விபரீதம் நீரே என் காலில் விழுகிறீரே என்று கேட்க, அரசன் விஷயத்தில் இதுவே எமது ஹிந்து மக்களின் மனோ நிலை, நாம் அரசனை தெய்வமாய் எண்ணியிருக்கிறோம் என்றாராம். இந்த ஆனந்த திருவிழாவில் சக்ரவர்த்தியின் ஸர்வ சிரேயஸ்ஸின் பொருட்டு இதன் ஆசிரியர் ரசனம் செய்த சுலோகங்கள் குறிப்பு எமது மித்திரனின் வாசகர்களுக்காக அடுத்தபக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இதன் தாத்பரியமாவது:— ஜார்ஜ் சக்ரவர்த்தியே! சம்ரக்ஷிக்கப்பட்டவர்களாயும் சத்ருக்களை முறியடிக்கப்பட்டவர்களாயும் இருப்பவராய் சமஸ்த பிரஜைகளின் கண்ணுக்கும் மனதிற்கும் ஆனந்த திருவிழாவை உற்சாகத்துடன் நடத்திவரும் உம்முடைய கீர்த்தி சந்திரன் பெரியோர்களின் மார்க்கத்தை அவலம்பித்து மேன்மேல் விருத்தியாகட்டும். லண்டன் பூமியாகிய பாத்தியில் உண்டான விக்டோரியா மகாராணியான கற்பவல்லி, நித்யானந்தமுள்ள தேவ சக்ரவர்த்தியான மகேந்திரனின் பாரியாளான சசீ தேவியின் காதுக்கு அலங்கார பூதமாகயிருந்து வருகிறது. என்றால் ஸ்வர்க்கம் வரையில் அவளுடைய கீர்த்தி எட்டியிருக்கிறது என்று பொருள். அந்த கல்பவல்லியின் அழகான தளிர் இலை, பழம் நிர்மலமான புஷ்பக்கொத்து இவைகள் போன்ற புத்திர பௌத்திராதிகளில், ஏழாவது எட்வர்ட் மன்னராகிய புஷ்பராஜனின் தேனுக்குப்பான ஜார்ஜ் மன்னரின் குணநிசயங்கள் தேனீக்கள் போன்ற கவீசுவரரால் எப்படி வர்ணிக்க முடியாமலிருக்கமுடியும். ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் அனுக்ரஹத்தால் விசேஷமான சௌக்கியத்தையும் ஆயுராரோக்கிய பாக்கியத்தையும் அனுபவித்துக்கொண்டும், செல்வம் நிறைந்து, சங்கடங்களும் பயங்களும் நீங்கி, பரம ஸாதுக்களான உங்கள் பிரஜைகள் சந்தோஷமடைந்தவர்களாய், உங்கள் கீர்த்தி எங்கும் வியாபித்ததாய், புத்திர பௌத்திர பாரம்பரியமாய் எங்களை சம்ரக்ஷித்துக்கொண்டு, சக்ரவர்த்தினியான மேரி அம்மாளுடன் சுகமாய் நீடூழி வாழ்ந்திருங்கள். காவிரி தீரத்தில் விளங்கும்கும்பகோணத்தில் வசிக்கும் பாகவத ரங்கநாதாசாரியாரின் இந்த சுலோகங்களால் மாத்வமித்திரன் என்னும் இந்த மாத்வர்களின் பத்திரிகையானது பாரத சக்ரவர்த்தியிடம் பக்தியை அறிவிக்கிறது.



वर्धतां वर्धतां जार्ज्यशश्चन्द्रमाः
राजतेऽराजते सत्पदं चाश्रयन् ।
पालितापालिताशेषदृङ्मानस-
स्योत्सवं सोत्सहं तन्वतः श्रीनिधे ॥

श्रीमल्लण्डनकालवालविलसत्सान्तानिकी वल्लरी
नित्यानन्दनिलिम्पनाथरमणीकर्णावतंसायते ।
तस्यास्सुन्दरमञ्जरीदळफलस्वच्छासुगुच्छागल-
च्छ्रीमासाञ्चितपुष्पराजमधु किं भृङ्गै र्न सङ्गीयते ॥

श्रीरामानुग्रहेण प्रगुणमनुभवं श्चायुरारोग्यभाग्यं
श्रीपुष्टस्वीयनष्टाधिभयविषयजाशेषशिष्टातितुष्टः ।
श्रीमज्जार्ज्भूपभूपानतविशदयशोराशिनीशारिताशः
श्रीमत्या मेरिपत्न्या सह विहर चिरं पुत्रपौत्रैश्च रक्षन् ॥

कावेरिकूलपरिमण्डितकुम्भघोण-
वास्तव्यभागवतरङ्गपतीड्यवाग्भिः ।
श्रीमाध्वमित्रमिति माध्वसुपत्रिकेयं
भक्तिं प्रदर्शयति भारतभूपतीन्द्रे ॥

---

# ஆசாரமாலை.

---

(முன் 286-ம் பக்கம் தொடர்ச்சி.)

கரசுத்தி என்பது மணிபந்தே ப்ரகோஷ்டே ச கூர்பரே ஹஸ்தஸந்திஷு । தத் பிருஷ்ட பார்ச்வயோ ஸ்சைவ கரசுத்தி ருதாஹிருதா என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது கைமணிக்கட்டும் முன்கை, முழங்கை முன்புறம் முழங்கைக்கட்டு முழங்கை பின்புறம் முழங்கை விலாப்புறம் இந்த பாகங்களை யம் ரம் வம் என்ற பீஜாக்ஷரங்களைச் சொல்லி சுத்தி செய்துகொள்ளவேண்டும். அந்த பீஜாக்ஷரங்களா

லேயே திக்பந்தனம் செய்யவேண்டும். குரு நமஸ்காரமும் செய்ய வேண்டியதாகும். இதற்கு குருமந்திரம் என்றும் சொல்வது உண்டு. குருமந்திரத்தைச் செய்யாதவன் ரௌரவ நரகத்தை அடைவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தனக்கு ஸத்சாஸ்திரத்தையோ ஸன்மந்திரத்தையோ சொல்லிக்கொடுத்தவராய் குரு எனப்படுகிறவரையும், அவருடைய குருவான ஆதி குருவையும், ஆனந்த தீர்த்த பகவத்பாதாளான மூல குருவையும், பாஞ்சராத்ராகமத்தில் சொல்லியபடிக்குள்ள ஸ்ரீவேதவியாஸர், பாரதி, ஸரஸ்வதி, வாயு, ப்ரம்மர், லக்ஷ்மீ, நாராயணர், ஹரி ஆகிய எழு தேவதைகளையும், கடைசியில் ஸ்ரீவாசுதேவனையும் நமஸ்கரிக்க வேண்டியதாகும். எப்படியெனில், . முதலில் ஸ்ரீகுருப்யோ நம: இரண்டாவதாக பரம குருப்யோ நம: மூன்றாவதாக ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த குருப்யோ நம: நான்காவதாக வேதவியாஸாய நம: ஐந்தாவதாக பாரத்யை நம: ஆறாவதாக ஸரஸ்வத்யை நம: எழாவதாக வாயவே நம: எட்டாவதாக ப்ரம்மணே நம: ஒன்பதாவதாக லக்ஷ்ம்யை நம: பத்தாவதாக நாராயணாயநம: பதினொன்றாவது ஸ்தானத்தில் ஹரயே நம: பன்னிரண்டாவது ஸ்தானத்தில் வாஸுதேவாய நம: என்று நமஸ்காரம் செய்யவேண்டும்.

பிறகு தன்னுடைய ஹிருதயகமல மத்யத்திலுள்ள பகவானை ஸுஷும்னை என்று மூலாதாரத்திலிருந்து சிரஸ் வரையில் போகும் ப்ரதானமான நாடியின் வழியாய் எழுப்பிக்கொண்டுபோய் தன் சிரஸ்ஸில் ஸ்தாபித்துவிட்டு இடது வயிற்றுக்குள் பாபபுருஷனை தியானிக்க வேண்டும். அந்த பாப புருஷன் எவ்வாறு இருக்கிறானென்றால், ப்ரம்மஹத்யாசிரஸ்கம்ச ஸ்வர்ணஸ்தேய புஜத்வயம்। தத்ஸம்யோக பதத்வந்தம் அங்கப்ரத்யங்க பாதகம்। உப பாதக ரோமாணம் ரக்தஸ்மச்ரு விலோசனம்। பிங்கோர்த்வகேசம் தூர்கந்தம் ஸ்மரேத் ப்ராதேசமாத்ருகம்। கட்கசர்மதரம் கிருஷ்ணம் குக்ஷௌபாபம் விசிந்தயேத்। என்று ப்ரம்மஹத்யா பாபத்தை சிரஸ்ஸாகவும தங்கத்திருட்டு பாபத்தை இரு புஜங்களாகவும் இந்த பாபங்கள் செய்பவர்களுடன் சேர்க்கை என்னும் பாபத்தை இரு பாதங்களாகவும், இதர மகா பாபங்களை இதர பெரிய சிறிய அவயவங்களாகவும், சிறிய பாபங்களை ரோமங்களாகவும் சிவந்த மீசையையும் சிவந்த கண்களையும் மங்கல் நிறமான உயர் தூக்கிய தலை மயிர்களையும் நாறும் சரீரத்தையும் கொண்டவனும், கருப்பாயும் கையில் ஓர் பட்டா கத்தியையும் கேடயத்தையும் பிடித்தவனும் ஒரு ஒட்டை அளவு இருப்பவனுமுள்ள பாப புருஷனை எண்ணவேண்டும். அவனை குக்ஷிப்ரதேசத்தினின்றும் நாபி தேசத்திற்கு கொண்டுவந்து, நாபியில்



ஆறு கோணமுள்ள மண்டலத்தின் நடுவிலுள்ள நீலவர்ணனும் வாயு பீஜத்தால் சொல்லப்படுகிறவனும் சங்கம் கதை பத்மம் சக்கரம் இந்த ஆயுதங்களைக்கொண்ட பகவான் ப்ரத்யும்னமூர்த்தி என் சரீரத்திலுள்ள பாப புருஷனை வாயுவால் சோஷிக்கச் செய்யட்டுமென்று வாயால் சொல்லி பூரகமென்னும் சுவாச பந்த கிரமப்படி சுவாசக் காற்றை நிரப்பிக்கொண்டு, ஓம்யம் என்று வாயுபீஜாக்ஷரத்தை நாபியை தொட்டுக்கொண்டு ஆறு தடவை ஜபம் செய்து அந்த பாபபுருஷனை சோஷித்துப் போனதாய் எண்ணவேண்டும். பிறகு அந்த பாப புருஷனை ஹிருதய தேசத்திற்கு கொண்டுவரவேண்டும். அந்த ஹிருதயத்தில் த்ரிகோண மண்டலத்தின் நடுவிலுள்ளவனும் சிவந்த வர்ணனும் அக்னியில் இருப்பவனும் சங்கம் பத்மம் சக்ரம் கதை இந்த ஆயுதங்களை கிரமமாய் நான்கு கைகளில் கொண்டவனுமான பகவான் சங்கர்ஷண மூர்த்தி, என் சரீரத்திலுள்ள பாப புருஷனை அக்னியைக்கொண்டு கொளுத்தட்டும் என்று சொல்லி ஹிருதயத்தைத் தொட்டுக்கொண்டு ஓம் ரம் என்று அக்னி பீஜாக்ஷரத்தை பன்னிரண்டு தடவை ஜபித்து பின் அந்த பாப புருஷன் எரிந்துபோனதாய் தியானம் செய்யவேண்டும். அவனுடைய சாம்பலை இடது நாஸிகையின் துவாரத்தின் வழியாய் ரேசகமென்னும் சுவாசபந்தக்கிரமத்தின் மூலமாய் வெளியில் தள்ளிவிடவேண்டும். பிறகு சிரஸ்ஸிலுள்ள வட்டமான மண்டலத்தின் நடுவிலுள்ள வெண்மையான வர்ணமுள்ளவரும் வருணனாகிய ஜலத்திலுள்ளவரும் வருண பீஜாக்ஷரத்தால் சொல்லப்படுகிறவரும் சங்கம் சக்ரம் பத்மம் கதை இந்த ஆயுதங்களை கிரமமாய் தரித்தவருமான ஸ்ரீவாஸுதேவமூர்த்தி பகவான் என் கால் முதல் தலை வரை என் சரீரத்தை வருண பகவானைக்கொண்டு அமிர்த விருஷ்டியால் தோய்க்கச்செய்யப்படட்டுமென்று சொல்லி சிரஸ்ஸை தொட்டுக்கொண்டு கும்பகம் என்னும் சுவக்ச பந்த ரீதியில் ஓம் வம் என்று வருண பீஜாக்ஷரத்தை 24 தடவை ஜபிக்க வேண்டும். இவ்வாறு சரீரத்தை சுத்தி செய்துகொள்ளவேண்டும்.

பிறகு இந்த சரீரத்தில் தத்வாபிமானி தேவர்களையும் மாத்ருகைகளாகிய அக்ஷராபிமானி தேவர்களையும் அந்தந்த இடங்களில் இருப்பதாய் தியானம் செய்யவேண்டும். இதற்கு தத்வ நியாஸம் மாத்ருகாந்யாசம் என்று பெயர். வைஷ்ணவ மந்திரங்கள் ஜபிக்கும்பொழுது தத்வ நியாசம் செய்து பிறகுதான் மாத்ருகாநியாஸம் செய்யவேண்டும். தேவபூஜை முதலியவைகளிலோ மாத்ருகாநியாஸம் செய்த பிறகு தத்வ நியாஸம் செய்யவேண்டும்.

தத்வநியாஸம் மந்திரம் செய்யவேண்டிய கிரமங்களை மந்திர புஸ்தகங்களிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். தத்வநியாஸமென்றால் அந்தந்த தத்வங்களின் அபிமானி தேவர்களின் அந்தர்யாமியான பகவத்ரூபங்களை சரீரத்தில் அந்தந்த ஸ்தானங்களில் தியானிக்கவேண்டியதாகும். அவர் சாக்ஷாத் ஸ்ரீவிஷ்ணுதான் என்றறிவிக்க பராய என்ற பதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் ஹிருதயத்தின் சுற்றி

லும் மாலாகாரமாய் ஸ்ரீலக்ஷ்மீ நாராயண ரூபங்களை தியானிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சக்தி ப்ரதிஷ்டை, ஸம்வித் ஸ்பூர்த்தி, ப்ரகிருதி, கலை, வித்தை, மதி, நியதி, மாயை, காலன், புருஷன் ஆகிய இந்த பன்னிரண்டு தத்வங்களின் அந்தர்யாமி ரூபங்களான பன்னிரண்டு லக்ஷ்மீநாராயண ரூபங்களை ஹிருதயத்தின் சுற்றிலும் நமஸ்கரிக்கின்றேன்.

13 வலது பாஹுவில் அவியக்தத்திற்கு அபிமானி ப்ரம்மாணிபாரதி
14 இடது பாஹுவில் மகத்தத்வத்திற்கு அபிமானி ப்ரம்மவாயு.
15 வலது பாதத்தில் அகங்காரத்திற்கு அபிமானி கருடசேஷ [ருத்திரர்கள்.
16 இடது பாதத்தில் மனஸ் தத்வத்திற்கு அபிமானி ஸ்கந்தன் [இந்திரன்.
17 வலதுகை விரல்கள் ச்ரோத்திரத்திற்கு அபிமானி திக்தேவதை [கள்.
18 த்வக்குக்கு அபிமானி ப்ராணன்.
19 சக்ஷுஸுக்கு அபிமானி சூரியன்.
20 ஜிஹ்வைக்கு அபிமானி வருணன்
21 க்ராணத்திற்கு அபிமானி அசுவினிதேவர்கள்.
22 இடது கைவிரல்களில் வாக்குக்கு அபிமானி அக்னி.
23 கைக்கு அபிமானி தக்ஷன்.
24 பாதத்திற்கு அபிமானி ஜயந்தன்.
25 பாயுக்கு அபிமானி மித்ரன்.
26 உபஸ்தத்திற்கு அபிமானி மனு.
27 வலது கால்விரல்களில் சப்தத்திற்கு அபிமானி பிருஹஸ்பதி
28 ஸ்பரிசத்திற்கு அபிமானி அபானன். [ப்ராணன் இவர்கள்.
29 ரூபத்திற்கு அபிமானி வ்யானன்.
30 ரஸத்திற்கு அபிமானி உதானன்.
31 கந்தத்திற்கு அபிமானி ஸமானன்.
32 இடது கால் விரல்களில் ஆகாசத்திற்கு அபிமானி மகாகணபதி.
33 வாயுக்கு அபிமானி தேவதை ப்ரவஹவாயு
34 தேஜஸ்ஸுக்கு அபிமானி தேவதை அக்னி.
35 அப்புக்கு அபிமானி வருணன்.
36 ப்ரிதிவிக்கு அபிமானி சனீச்வரன்..

ஆகிய இந்த தேவர்களின் அந்தர்யாமியான பகவத் ரூபத்தை மேற்கண்ட அந்தர்த:ஸ்தானங்களில் தியானித்து நமஸ்காரம்செய்து நியாஸம் செய்யவேண்டும்.

பிறகு மாத்ருகாநியாஸம் செய்யப்படவேண்டும். மாத்ருகைகள் எனப்படும் அகாரம் முதற்கொண்டு க்ஷகாரம் வரையிலுள்ள 51 எழுத்துக்களின் தேவதைகளாகிய அடியிற்கண்ட பகவத் ரூபங்களை மந்திரத்தால் அறிவித்துள்ள ஸ்தானங்களில் தியானித்து நியாஸம் செய்ய வேண்டும். இந்த பகவத் ரூபங்களின் லக்ஷணங்கள் முதலியவை, மற்றொரு சந்தர்பத்தில் அறிவிக்கப்படும். (தொடரும்).



# ஸ்ரீநரஸிம்ஹர் சிவனின் சரபாவதாரத்தால் கொல்லப்பட்டதுண்டா?

நாம் இந்த நரஸிம்ஹ ஜயந்தி ஸந்தர்பத்தில் சிதம்பரத்தின் சமீபத்திலுள்ள சீர்காழிக்குப்போயிருந்த சமயம், திருஞான சம்பந்தர் என்னும் நாயன்மார் ஞானப்பாலுண்டு சிவனடியார்களில் சேர்ந்த ஸ்தலமாகிய அவ்வூரிலுள்ள மகத்தான சிவாலயத்தில், கீழ் தளத்தில் பிரம்ம பூசிதரான லிங்கரூபி பரமசிவன் பிரம்மபுரீசரும், மேல் தளம் மாளிகை மலைக் கோயிலில் தோணியில் எழுந்தருளியிருப்பவராய் ப்ரளய காலத்தில் இவ்வூர் தோணியாய் மிதந்த சமயம், அதில் பார்வதி சமேதராய் பரமசிவன் ஆவிர்பவித்து மூர்த்திமானாய் இருக்கும் தோணியப்பரும், அந்த தளத்திற்கும் மேலே மலை உச்சியில் சட்டையப்பரென்னும் பைரவ மூர்த்தியும் விளங்கிவருகின்றனர். சட்டையப்பரென்ற நாமம் ஏற்பட்டதன் வரலாற்றை விசாரித்ததில், ஹிரண்யனை ஸம்ஹரித்தபொழுது நரஸிம்ஹன் ஹிரண்யாஸுரனுடைய ரக்தத்தை பானம் செய்துவிட்டதால் ரக்த வெறி கொண்டுபோய், புத்தி மயங்கித் தடுமாற்றமடைந்து, உலகத்தை எல்லாம் ஹிம்சை செய்ய, தேவர்கள் பரமசிவனை ப்ரார்த்திக்கவும் பரமசிவன் தன் ஆளான பைரவரை நரஸிம்ஹரைக் கொன்றுவரும்படி அனுப்ப, சிம்ஹத்தைக் கொல்வதற்காக சிம்ஹத்தின் சத்ருவான எட்டுக் கால்கள் நான்கு கைகள் ஐந்து முகங்கள் இரு இரக்கைகள் படைத்துள்ள சரபமென்னும் மிருக ரூபத்தை எடுத்துக் கொண்டு, யுத்தத்திற்கு வந்து, நரஸிம்ஹனை ஸம்ஹரித்துவிட்டு, உலகில் இதை பஹிரங்கப்படுத்த அவருடைய தோலையே சட்டையாய் போர்த்துக்கொண்டு, உக்ரமாய் சட்டையப்பரென்று நாமம் கொண்டு, வீற்றிருப்பதாயும், பிரதி சுக்ரவாரமும் புனுகு சட்டம்தான் அவருக்கு பூசப்படுகிறதென்றும், அன்று மட்டில் இரவு 12 மணிக்குமேல் கோயில் வேலையாட்களும்கூட ஸ்நானம் செய்து மிக்க ஆசாரத்துடன் ப்ரத்யேக நைவேத்யாதிகளால் பூஜை செய்யப்படுகிறதென்றும், அவருடைய பார்வைக்கு எதிரில் பெரும் சிலவில் கட்டப்பட்ட சிதம்பரநாத

முதலியார் மேல் மாளிகை கட்டிடம் திடீரென்று விழுந்துவிட்டதென்றும் அவ்வூரார் சொல்லத் தெரியவருகிறது. ஈசானரான பரமசிவனுடைய சக்தி அபாரமானது. ஆனால் சரபாவதாரமெடுத்து நரஸிம்ஹனைக்கொன்றாரென்று ஆங்காங்கு பிரசித்தமாயிருக்கும் இந்த கதை உண்மையல்லவென்று அறுபத்திநான்கு கலைகளிலும் நிபுணராய் சைவமதத்தைக் கண்டித்த ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகள் தம் நியாயமௌக்திக மாலை என்னும் நூலில் நிரூபித்திருக்கும் பாகத்தை இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீநரஸிம்ஹ ஜயந்தி புண்யோற்சவத்தை முன்னிட்டு எமது மித்திரனின் வாசகர்களுக்கு அறிவிக்க இங்கு குறிப்பிடுகிறோம்.

ஹிரண்யாஸுரனின் இரக்தத்தைப் பானம் செய்ததால் வெறிகொண்ட நரஸிம்ஹன் உலகத்தை உபத்திரவப்படுத்தவும் அவரை அடக்க பரமசிவனை தேவர்கள் ப்ரார்த்திக்கவும், பரமசிவன் வீரபத்திரனுக்கு ஆக்ஞையிட வீரபத்திரன் சரபரூபமெடுத்து நரஸிம்ஹனுடன் யுத்தம் செய்து நரஸிம்ஹனின் காலைப்பிடித்து ஆகாயத்தில் சுழற்றவும், உள்ளிருந்த அந்த ரக்தத்தை எல்லாம் நரஸிம்ஹன் கக்கிவிட்ட பிறகு நரஸிம்ஹன் சுய நிலைக்கு வந்து வீரபத்திரனை ஸ்தோத்திரம் செய்ய, வீரபத்திரன் நரஸிம்ஹனைப் பார்த்து இனி மறுமுறை இவ்வாறு செய்யாதே அடங்கிட என்று விஷ்ணுவை நியமனம் செய்துவிட்டு, பரமசிவனின் சமீபம் போய் சேர்ந்தான் என்று ஸ்காந்த புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சைவபுராணமோ பரமசிவனே சரபாவதாரம் எடுத்துவந்து நரஸிம்ஹரைக் கொன்றாரென்று கூறுகிறது. இவ்விரண்டு கதைகளில் விரோதம் ஸ்பஷ்டமானதே. ஸ்காந்த புராணமும் சைவ புராணமும் இரண்டுமே தாமஸமென்பது பிரசித்தம். மேலும் ஸாத்விக புராணங்கள் எதிலுமே நரஸிம்ஹன் ஹிரண்யாஸுரனின் ரக்தத்தைப் பானம் செய்ததாய் சொல்லப்படவில்லை. அப்படிப் பானம் செய்தாலும் அவருக்கு மோகத்தை நிரூபிப்பதும் அஸங்கதம். "ஸர்வ பூதஸ்தமேகம் நாராயணம் காரணரூபம் சோகமோக விநிர்முக்தம் விஷ்ணும் த்யாயன் ஸ்ரீர்ததி" என்று ஸர்வ ப்ராணிகளிலிருப்பவராயும், காரண ரூபியாயும் சோக மோகாதிகளில்



லாதவராயுமுள்ள விஷ்ணுவை த்யானித்துக்கொண்டு ஸ்ரீதேவி இருக்கிறாள் என்று விஷ்ணுவுக்கு சோக மோகாதிகள் இல்லாததாய் ஸ்பஷ்டம் வேதம் அறிவிக்கிறது. மேலும் எல்லா லோகமும், நரஸிம்ஹனால் ஹிம்சிக்கப்பட்டது என்று சொல்வதும் அஸங்கதமே. "பரித்ராணாய ஸாதூனாம் விநாசாயச துஷ்க்ருதாம்| தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமியுகே யுகே||" இத்யாதி ஸ்மிருதியால் விஷ்ணுவின் அவதாரங்களுக்கு ஸாது ஸம்ரக்ஷணமும் துஷ்ட நிக்ரஹமும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் நரஸிம்ஹன் சரபனால் கொல்லப்பட்டான் என்பதும் அஸங்கதமே. ந்ருஸிம்ஹதாபனீயத்தில் "ஏஷ தேஹாந்தே தமஸ: பரமம் தாமமாப்னுயாத் யத்ராவிரஜோ ந்ருஸிம்ஹோ பாஸதே தத்ர உபாஸதே தத்ஸத்ருசா முனய:" என்று சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு நரஸிம்ஹர் பரமபதத்திலும் இருப்பதாய் ஏற்படுகிறது. மேலும் இதன் துவக்கத்திலேயே "கேவலம் ஜ்யோதி: ஏகம் அனாதி அனந்தம்" என்று நரஸிம்ஹருக்கு ஆதி அந்தமில்லாமலிருக்கும் தன்மையும் சொல்லப்பட்டிருக்கிறது. அதிகம் சொல்லவேண்டியதில்லை. அநேக புராணங்களிலிருந்து நரஸிம்ஹன்தான் சரபனைக் கொன்றவர் என்று தெரியவருகிறது. திருஷ்டாந்தம்:— பாத்மபுராணத்தில் "தௌ யுத்யமானௌ ச சிரம்வேகேன பலவத்தமௌ||" நரஸிம்ஹரூபமும் சரபரூபமும் தரித்த இவ்விரண்டு மகா பலிஷ்டர்களான தேவர்களும் வெகு நேரம் பலமாய் யுத்தம் செய்தும் ஒருவருக்கொருவர் மிஞ்சியே இருந்தனர். பிறகு கோபமடைந்து பெரும் சரீரத்துடன் பயங்கர பராக்கிரமமுள்ள நரஸிம்ஹர் ஆயிரம் நகங்களை அந்த சரபத்தின் சரீரத்தில் ப்ரயோகம் செய்தார். கீழே விழும் உக்ரமான சரபத்தைத் தன் க்ரூரமான நகங்களால் நரஸிம்ஹர் கொன்றார். நிஹதே சரபே தஸ்மின் ரௌத்ரே மது நிஷூதனம்| துஷ்டுவு: புண்டரீகாக்ஷம் தேவா: தேவர்ஷயஸ்ததா| சரபத்தைக்கொன்ற பின் நரஸிம்ஹ ரூபியான ஸ்ரீவிஷ்ணுவை தேவர்களும், தேவரிஷிகளும் ஸ்தோத்திரம் செய்தனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வாமன புராணத்தில் "விக்ருத்ய பாஹூருசிர: வஜ்ர கல்பமுகை: நகை:| மேரு ப்ருஷ்டே ந்ருஸிம்ஹேன சரபஸ்சாப

ஸோபதத்||" புஜங்களும் தொடைகளும் சிரஸ்ஸும் உருமாற்றமடைந்து நரஸிம்ஹனால் நகங்களால் பிளக்கப்பட்டதாய் சரபம் மேருபர்வதத்தின் அடிவாரத்தில் விழுந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. கூர்மபுராணத்தில் வஜ்ஜிர்த்துக்கொப்பான மூக்கு நுணிகளுள்ள ஐந்து முகங்களைக் கொண்டதும், எட்டு கால்கள், இரண்டு இரக்கைகளைக் கொண்டதும், அடர்ந்த கருநிறமுள்ளதும் ஜொலிக்கும் ஆயிரம் கைகளைக் கொண்டதும் அதில் ஆயிரம் ஆயுதங்களைத் தரித்திருப்பதுமான அந்த சரபரூபத்தை. "கராதாதாய ப்ரத்யேகம் முகம் சஞ்சுபுடத்வயம்| விதார்ய ந்ருஸிம்ஹஸ்தம் ஹிரண்யகசியும்யதா" தனித்தனியே ஒவ்வொரு முகத்திலுள்ள இரண்டு மூக்கு நுணிகளைப் பிடித்து ஹிரண்யனைக் கிழித்ததுபோல் நரஸிம்ஹர் கிழித்து ஸம்ஹரித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக்னேய புராணம் 40-வது அத்யாயத்தில் தத: க்ஷணேன சரபோ நாத பூரித திங்முக:| அப்யாசமகமத் விஷ்ணோ: வ்யநதத் பைரவஸ்வனம்| ஸதமப்யாகதம் த்ருஷ்ட்வா ந்ருஸிம்ஹ: சரபம்ருஷா| நகைர் விதாரயாமாஸ ஹிரண்யகசிபும் யதா| ஓர் க்ஷணத்தில் சரபமானது திக்கெல்லாம் வியாபிக்கும்படி சப்தம் செய்து பைரவ சப்தம் போட்டுக்கொண்டு விஷ்ணுவின் சமீபம் வந்தது. சமீபத்தில் சரபம் வந்ததை கோபத்துடன் நரஸிம்ஹர் பார்த்து ஹிரண்யகசிபுவைக் கொன்றமாதிரி அந்த சரபத்தை நகங்களால் பிளந்துவிட்டார். மேலும் ஹரிம் ஹரந்தமனுயந்தி தேவா: விச்வஸ்யேசானம் விருஷபம் மதீனும் என்ற சுருதியில் ஈசானர் என்ற சப்தத்தால் சொல்லப்படும் ருத்திரனுக்கு ந்ருஸிம்ஹரால் கொல்லப்பட்டதான தன்மை குறிக்கப்பட்டிருக்கிறது. விஸ்வஸ்ய விச்வே தேவர்கள் ஈசானம் ருத்திரனை ஹரந்தம் ஸம்ஹரிக்கும் ஹரிம் ஹரியை அனுயந்தி அனுஸரிக்கின்றனர் என்று அந்த சுருதியால் தெரியவருகிறது. ஹரியை ஸம்ஹரிக்கும் பரமசிவனை விச்வேதேவர்கள் அனுஸரிக்கின்றனர் என்று அர்த்தம் சொல்லமுடியாது. ஏனெனில் "ப்ரம்மாணமிந்த்ரம் ருத்ரம் ச யமம் வருணமேவச| நிஹத்ய ஹரதே யஸ்மாத் தஸ்மாத் ஹரிரிஹோச்யதே" ப்ரம்மா இந்திரன் ருத்திரன் யமன் வருணன் இவர்களைக் கொன்றுபோடுகிறராத



லால் ஹரி என்று இவருக்கு பெயரென்ற ஸ்மிருதியின்படி ப்ரம்மருத்திராதிகளைக் கொல்பருக்குத்தான் ஹரி சப்தம் பிரவிருத்திக்க நிமித்தமிருப்பதால் வேறுவிதமாய் அன்வயமும் செய்யமுடியாது. ஹரி என்பதாலேயே அபகரித்தவர் என்று அர்த்தமானபின் ஹரந்தம் என்பது வியர்த்தமல்லவா என்றால் ஹரி என்ற பதம் இங்கு கேவலம் ரூடம் மட்டில் அல்ல, யௌகிகரூடமாகிறது என்பதால் அது வியர்த்தமாகாது. மேலும் தஸ்யேந்த்ரோ வஜ்ரி ரூபேண தனுர்ஜ்யாமச்சினத்ஸ்வயம் என்று தைத்திரீய ஆரணத்தில் விஷ்ணுவால் ப்ரேரிக்கப்பட்ட இந்திரனால் ருத்திரனுடைய சிச்சேதம் செய்யப்பட்டிருப்பதாய் சொல்லப்பட்டிருக்கிறது. இந்திரனால் ருத்திர சிரச்சேதம் செய்யப்பட்டதென்பது பல பிரமாணங்களால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் ஆகவே ருத்திரனென்று பெயர்கொண்ட வேறு ஒரு யக்ஷனின் பரமாய் சொல்லவேண்டுமேயல்லாது பிரஸித்தமான ருத்திரனின் பரமாய் சொல்லலாகாது என்றும் அவ்வாறே ஸாமகர்களும் கூறுகின்றனர் என்றும் ஆக்ஷேபனை சொல்லத்தகுந்ததாயில்லை. ஏனெனில் மேற்கூறிய சுருதி ஸ்மிருதிகளின்படி பிரசித்த ருத்திரனுடைய பரமாகவே அர்த்தம் செய்யவேண்டியது நியாயமாகும். பிரஸித்த இந்திரனுக்கு பிரசித்த ருத்திரனுடைய சிரச்சேதம் செய்ய ஸாமர்த்தியமில்லாமலிருந்தாலும் விஷ்ணு சக்கரத்தின் ஸகாயத்தாலும் விஷ்ணுவின் ஸகாயத்தாலும் அவனுக்கு ஸாமர்த்தியம் ஏற்படக்கூடும். இது விஷயத்தில் பிரமாணமுமில்லாமல் இல்லை. உத்தர கூர்ம புராணத்தில் "ரக்ஷிதும் நைவசக்னோஷி ஸ்வாத்மானமபி சங்கர| யுத்தேகிம்ஜேஷ்யஸித்வம் மாம் பூர்வ விருத்தம் மயோச்யதே| யதா மத்பக்த சக்ரஸ்ய யக்ஞத்வம்ஸ: க்ருத: த்வயா| ததாஹம் தே சிர: சித்வா தத்க்ரதுர் ரக்ஷிதோமயா| ததோ மாம் ப்ரார்த்தயாமாஸ மனோபீஷ்டாய பார்வதி| ததாவை மத்ப்ரஸாதேன ப்ராணோலேபே பவான் சிவ" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு கல்பத்தில் ஓர் இந்திரன் நாராயணனின் மகாபக்தனாயிருந்தான். அவன் எல்லா தேவர்களையும் அலக்ஷியம் செய்துவிட்டு நாராயணனை மட்டில் உத்தேசித்து யக்ஞத்தைச்செய்ய ஆரம்பித்தான். பிறகு எல்லா தேவர்களும்

சேர்ந்துஇந்திரனின் யக்ஞத்தைக் கெடுக்க ருத்திரனை அனுப்பினார்கள். அப்பொழுது ருத்திரன் இந்திரனுடைய யக்ஞத்தைக் கெடுக்க ப்ரவிருத்தித்தவுடன் இந்திரன் நாராயணனை ஸ்மரிக்கவும் நாராயணன் யக்ஞ விக்னம் செய்த ருத்திரனுடைய சிரஸ்ஸை சக்ராயுதத்தால் சேதித்தார். பிறகு பார்வதி ஸ்தோத்திரம் செய்யவும் பகவான் பரமசிவனை உயிர்ப்பித்து விட்டார் என்று இந்த சரிதை மத்ஸ்ய புராணத்திலும், நாரஸிம்ஹ புராணத்திலும் காணலாம். அதுவே மேற்கண்ட ஸ்லோகங்களில் சொல்லப்படுகிறது மகாதேவா! உன்னையே நீ காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. அப்படியிருக்கயுத்தத்தில் என்னை நீஜயிப்பதாவது. முன்பு நடந்த கதையை நான் சொல்கிறேன் கேள். என்பக்தனை இந்திரனுடைய யக்ஞத்தை எப்போது நீ கெடுக்கப் பார்த்தாயோ அப்பொழுதே நான் உன் தலையை வெட்டி அந்த யக்ஞத்தை ஸம்ரக்ஷித்தேன். அப்பொழுது பார்வதி தன் மனோபீஷ்டம் பூர்த்தியாக என்னை ஸ்தோத்திரம் செய்தாள். பிறகு என் அனுக்ரஹத்தால் உன் பிராணனை நீ அடைந்தாயென்று. இதனல் ருத்திரன் என்பதற்கு ப்ரஸித்த ருத்திரனையே அர்த்தம் செய்யவேண்டியதாகிறது. அதன்படி மேற்கண்ட சுருதியிலும் ஈசானம் ஹரந்தம் ஹரிம் என்பதற்கு பரமசிவனைக்கொன்ற ஹரி என்றே அர்த்தம் செய்ய வேண்டியதாகும். மிருக ரூபமாகிய பரமசிவனை நரஸிம்ஹ ரூபமாகிய விஷ்ணு தான் கொன்றவரென்றும் நரஸிம்ஹ விஜயமே பிரமாணமேயன்றி சரப விஜயம் பிரமாணமல்லவென்றும் நன்கு ஏற்படுகிறது.

---

# செய்தித்திரட்டு.

---

கோயமுத்தூர் மத்வஸித்தாந்த புபுத்ஸு ஸபையில் 14—4—35, 5—5—35- ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணசாரியாரால் யுக்தி மல்லிகா விஷயமும் 27—4—35, 28—4—35உ களில் ஈரோடு ரிடைர்ட் வக்கீல் ஸ்ரீமான் M. கோவிந்த ராயரால் கர்மயோகம், பக்தியோக விஷயமும் 12—5—35 நாமக்கல் ஸ்ரீமான் வெங்கண்ணசாரியாரால் பக்தியே மோக்ஷ ஸாதனம் என்னும் விஷயமும் 21—4—35 மைசூர் நாஹரி



தாஸரால் துருவசரித்திரம் ஹரி கதையும் நடத்தப்பட்டது. சாமையர் புதுவீதியிலிருக்கும் ஸ்ரீகோபாலகிருஷ்ண தேவாலயத்தில் ஸ்ரீமான் அவலக்கி ஸ்ரீனிவாசாசாரியாரின் பெருமுயற்சியின் பேரில் வழக்கப்படி ரதோற்சவமானது பிராம்மண சந்தர்ப்பணை ஸர்வமூலபாராயணம் முதலியவைகளுடன் விசேஷமாய் நடந்து வருகிறதென்று ஸ்ரீமான் P. G. வெங்கடசுப்பய்யா அறிவிக்கிறார்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமன் மத்வஸித்தாந்த ஸபையின் கீழ் ஸ்ரீமான் யதுநாதாசாரியாரவர்களால் ஏப்ரல் 7, 14, 22 மே 5, 12உ களில் கீதா உபன்யாஸமும் 21உ கும்பகோணம் ஸ்ரீமான் பூவராஹாசாரியாரால் அமிர்தமதனம் 25, 28 உ களில் ஸ்ரீமான் கௌலகி யதுநாதாசாரியாரால் புருஷார்த்தம், ஆத்மாநாத்மம் விசாரம் இந்த விஷயங்கள் உபன்யசிக்கப்பட்டதென்று ஸ்ரீமான் M. S. பத்மநாபராவ் அறிவிக்கிறார்.

முசரிக்கடுத்த உமையாள்புரம் கிராமத்தில் ஸ்ரீராமநாம பஜனை ஸபையாரால் ஸ்ரீராமநவமி உற்சவம் வழக்கப்படி 12—4—35 உ முதல் 10 நாட்கள் பஞ்சாமிருத அபிஷேகம் ஹரிபஜனை கடைசிநாள் சுமார் 250 பேருக்கு பிராமண சந்தர்பணை முதலியவைகளுடன் நடத்தப்பட்டதென்றும் 21 உ பன்று அல்லூர் ஸ்ரீமான் கணபதிஐயரால் புல்லாங்குழல் கச்சேரியும் இரவில் ஸ்ரீ ராமர் படத்துக்கு பஜனை கோஷ்டியுடன் ஊர் வலமும் பிறகு டீசர் ஸ்ரீமான் ரகூத்தமராயரால் பக்தியைப்பற்றி உபன்யாசமும் நடந்ததென்றும் ஸ்ரீமான்களான R. சஞ்சீவி R. ராஜகோபாலராவ் அறிவிக்கின்றனர்.

பிழைதிருத்தம் 18—4—35உ வெளியான மாத்வமித்திரன் 10-வது நம்பரின் 318ம் பக்கத்தில் 6-வது வரியில் கண்டிருக்கும் ரூ. 60 என்பதை ரூ. 600 என்று திருத்தி வாசிக்கவும். [ப-ர்]

---

## ஓர் மாத்வமாதின் வைராக்யம்.

---

இந்நகர் ரெட்டிராயர் குளம் தென்கரையில் பல வருஷங்களாய் போஜனம் விட்டு பாலையும் பழத்தையும் உண்டு பக்தியுடன் பிரதி வெள்ளி சனிகளில் பஜனை செய்துகொண்டிருந்த சுமார் 28 வயதுள்ள

இளம் கைம்பெண்ணை அம்மாளு அம்மாள் என்ற ஓர்மாத்வ ஸ்திரீ வீட்டில் நடந்த சில சில்லரை மனஸ்தாபத்தால் மனம் நொந்து வைராக்யத்தில் திடப்பட்டு நரஸிம்ம ஜயந்தியன்று இரவு பஜனையை நடத்தி, அவள் சமீபகாலமாய் இயற்றிவந்த தானவ்ரதகதை கீர்த்தனைகளில் அன்று ஸ்ரீகிருஷ்ணரை நாரதருக்கு தானம் கொடுக்கும் சந்தர்பத்தை பாட்டுகளுடன் நடித்துக்காட்டி தன் கைவசமுள்ள பலவெள்ளிப்பாத்திரங்கள் தங்கக்கிண்ணி முதலியவைகளை அவரவர்களுக்குக் கொடுத்துவிட்டு, மிக்கப் பெரியதான தன் வெள்ளிக் கிருஷ்ணப் பதுமையை அதை தனக்கு கொடுத்தவரிடம் தானமாக திருப்பிக் கொடுத்துவிட்டு, மறுநாள் 17—5—35 வெள்ளிக்கிழமை காலையில் வீடு விட்டு வெளிவந்து, ஊரிலுள்ள எல்லா தேவாலயங்களுக்கும் தெருக்கள் வழியாய் ஆடல்பாடல்களுடன் பஜனை செய்துகொண்டு போய் அன்றிரவு ஓர் தேவாலயத்தில் படுத்திருந்து, மறுநாள் 18௳ யன்று பாக்கியிருந்த தேவாலயங்களையும் தரிசித்து அவளுடையஏராளமான பந்துக்களும் நண்பர்களும் கோஷ்டியாரும் எவ்வளவு சொல்லியும் அதற்கு செவிகொடாமல் இனி வீட்டுக்குத் திரும்புவதில்லை என்றும் எப்பொழுதுமே பண்டர்புரத்திலேயே பஜனை செய்துகொண்டு இருக்கப்போவதாயும் சொல்லி நரஸிம்ஹ க்ஷேத்திரமான பரக்கல்லுக்கு ரயிலேறிவிட்டாள். அவளை இந்த இரண்டு நாட்களும் ஏராளமான கூட்டம் சூழ்ந்திருந்து அவளுடைய இனிமையான பாட்டுகளைக் கேட்டிருந்தது. அவளுடைய மனோ நிலையைப்பார்த்தவர்கள் அனைவருமே அவள் இவ்வூருக்கு இனி திரும்பமாட்டாள் என்று சொல்கின்றனர், அநேக ஜனங்கள் தாமாகவே அவளுடைய பிரயாணச்சிலவுக்கு அதிக பணங்களை ரயிலேறும் ஸமயம் கொடுத்தனர். அவளைத் தனியே விட மனமில்லாமல் அவளுடைய தாயார் முதலியோர் கூட சென்றிருக்கின்றனர். இது ஸம்பந்தமாய் இந்நகரில் மாத்வர்களில் விசேஷ பரபரப்பு காணப்படுகிறது.

---

## மீண்டும் அத்வைதிகளின் கூக்குரல்.

அத்வைதமதத்திற்கு வேதத்தில் இடமில்லை என்று எங்கும்போல் பலபிரமாணங்களுடன் உபன்யாஸம் செய்துவரும் ஸ்ரீஉத்திராதி ஸ்வாமிகளின் மத்வமத ப்ரசாரத்தைப் பார்த்து பல்லாரி ஜில்லாவிலுள்ள அத்வைதிகள் ஹம்பியில் கூட்டம்கூடி கூக்குரல்போட்டு உத்திராதி ஸ்வாமிகளுடன் வாதமாடி அவர் சொல்வதை நிரூபிக்கச்செய்ய தீர்மானித்து



பல்லாரி ஜில்லா முதலாவது கிளாஸ் ஆனரரி மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான் P. ராமச்சந்திரய்யர் மூலமாய் 25-4-35 ௳யன்று ஓர் ரிஜிஸ்தர் நோட்டீஸ் அனுப்பினர். அதில் ஸ்ரீ சங்கராசாரியாரின் அத்வைத மதத்தைத் தாக்குவது அத்வைதிகளின் மனத்தாங்கலை உண்டுபண்ணியிருக்கிறதென்றும் ஸ்ரீஸ்வாமிகள் சொல்வதை எல்லாம் ரூபிக்கவேண்டுமென்றும் இந்த எல்லா பாஷைகளிலுள்ள அவருடைய நூல்களுக்கு மூலபூதமான ஸம்ஸ்கிருத நூல்களை கோர்ட்டில் உடனே தாக்கல் செய்யவேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தது. ஸ்ரீஉத்திராதி ஸ்வாமிகள் ஏதோ புதியதாய் சில அம்சங்களை கல்பனை செய்துகொண்டு அத்வைத மதத்தின் மீது பெரிய பெரிய வெடிகுண்டுகளைப் போட்டு வருகிறாரென்றும் மட்டில் மத இரகசிய மறியாத இத்தகைய லௌகிகர்கள் நினைக்கின்றனரே ஒழிய அவர் மூலகிரந்தங்களாய் வைத்துக்கொண்டிருக்கும் நியாயஸுதை சந்திரிகை, தர்கதாண்டவம், நியாயாமிருதம், தரங்கிணி முதலான மகத்தான கிரந்தங்கள் நாடெங்கும் எந்த லைப்ரெரியிலும் எந்த புத்தகசாலையிலும் எந்த பண்டிதர்கள் வீட்டிலுமே இப்போது மட்டிலல்ல எப்போதுமே எத்தனையோ நூற்றாண்டுகளாக பகிரங்கமாக இருக்கின்றனவென்று அவர்கள் அறிந்தார்களில்லை 1931 ௵த்தில் அத்வைதிகள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டபடி பல்லாரியிலும் இந்த வாதத்திற்காக வெகு பலமான ஏற்பாடுகள் நடந்து வாதத்திற்காக வென்று குண்டூரிலிருந்து சிருங்கேரி விருபாக்ஷ பீடம் ஸ்ரீகல்யாணாநந்தபாரதி மண்டாசாரிய ஸ்வாமிகள் வரவழைக்கப்பட்டார். அவர் ஒன்றிரண்டு நாள் உபன்யாஸங்கள் செய்து அத்வைதமதத்தை கோஷித்து உத்திராதி ஸ்வாமிகளுடன் வாதமாடுவதாய் அறிவித்திருக்கையில் ஸ்ரீமத்வஸித்தாந்த விசாரசங்கத்தின் பிரசிடெண்டு செக்ரெடரி கையெழுத்தில் இரண்டு நோட்டீஸ்கள் வெளியாகி அதில் ஒன்றில் ஸ்ரீவிருபாக்ஷஸ்வாமிகளை உத்திராதிஸ்வாமிகளுடன் 27௳ சனிக்கிழமையன்று பொதுஸ்தலமாகிய டவுன்ஹாலில் வாதாட அழைத்தும், மற்றொரு நோட்டீஸில் இந்த வாதத்தைக்காண பொதுஜனங்களையும் அழைத்துமிருந்தது இவைகளைக் கண்டுவிட்டு ஸ்ரீவிருபாக்ஷஸ்வாமிகள் தம்மை கலக்காமல் இவ்வாறு நிச்சயம் செய்துவிட்டபடியால் தாம் வாதாடத்தயாராயில்லை என்று சாக்கு சொல்லி அந்த அபிப்ராயத்தை நிறுத்திவிட்டு ஊர் பிரயாணமானார். இவ்வாறு ஸ்ரீஉத்திராதிஸ்வாமிகளின் வாதமே ஆக்ஷேபிக்க முடியாமல் எங்கும் மேலிட்டிருக்கிறது எனத்தெரியவருகிறது.

---

# கும்பகோணத்தில் : : மூன்று ஸ்வாமிகள்

கும்பகோணத்திலிருந்து கொள்ளிடம் வரை போய் தாராபுரம் திரும்பிப் போகும் வழியிலிருந்த வாடப்பள்ளி முளுபாகலு மடம் ஸ்ரீ குருபக்திநிதி தீர்த்த ஸ்வாமிகளும், ராமேஸ்வர யாத்திரை முடித்துக்கொண்டு திருப்பதி யாத்ரா கிரமத்தில் தஞ்சாவூரிலிருந்து வந்த பீமன கட்டேமுனியிருந்த மடம் ஸ்ரீமத் ரகுதிலக தீர்த்த ஸ்வாமிகளும், புஷ்கரம், ஹரித்வாரம், குருக்ஷேத்திரம், பிருந்தாவனம், காசி, கயை முதலிய வடதேச யாத்திரை செய்துகொண்டு ராமேஸ்வர யாத்திரா கிரமத்தில் சிதம்பரம், விருத்தாசலத்திலிருந்து வந்த ஸ்ரீ உடுபி அஷ்ட மடத்தார்களில் ஒருவரான பேஜாவர மடாதிபதி ஸ்ரீ விச்வமான்ய தீர்த்தஸ்வாமிகளும் ஒரே சமயம் இந்நகரில் சேர்ந்தனர். 5–5–35 பானு வாரம் அக்ஷய த்ருதியையன்று இந்நகரில் பன்னிரண்டு விஷ்ணு மூர்த்திகளுக்கு பன்னிரண்டு கருடவாஹனம் நடத்தும் பாக்கியம் வாய்த்திருப்பது போல் இந்நகர் பிரமுகரான ஸ்ரீமான் K. R. ரகுநாதராயர் அவர்களின் அரண்மனைக்கு ஒப்பான கிருஹத்தில் ஸ்ரீபீமனகட்டே ஸ்வாமிகளும் ஸ்ரீபேஜாவரமடம் ஸ்வாமிகளும் ஒருங்கே பூஜை செய்வதைக்காணும் பாக்கியம் ஏற்பட்டது. ஸ்ரீ பேஜாவரமடம் ஸ்வாமிகள் ஆசிரம ஜ்யேஷ்டரானதால் ஸ்ரீ பீமன கட்டே ஸ்வாமிகள் அவரை நமஸ்கரித்து மந்த்ராக்ஷதைப்பெற்றார். மகா தீபாராதனை காலத்தில் ஒருவருக்கொருவர் சமீபம் வந்து அவர்வர்களின் பகவன் மூர்த்திகளை தரிசித்துப் போவதும் ஒருவரிடமிருந்து மற்றொருவர் தீர்த்தத்தைப்பெறுவதும் புஷ்பமாலாதிகளைப்போட்டு பரஸ்பரம் மரியாதை செய்து கொள்வதும், சேர்ந்தார்போல் பூஜை செய்து போஜனத்திற்கு உட்கார்ந்திருந்ததும், இருவர்களிடமும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் தீர்த்தங்களைப் பெற்றுப் போவதும் பார்ப்பதற்கு வெகு அழகாயிருந்தது. நேரில் நாம் விசாரித்து தெரிந்துகொண்டதில் இந்த பீமனகட்டே மடம் தான் ஸ்ரீ அச்யுதப்ரேக்ஷாசாரியாரின் மூலமடம் என்றும் பண்டர் கேர் மடம் கிளைமடம் என்றும் அநேகர் சாக்ஷி கூறி சமீ



பத்தில் ஹைகோர்ட்டு தீர்ப்பு ஆயிருப்பதாகவும் கோயமுத்தூர் C. M. பத்மநாபாசாரியார் முதலியோர் வேறுவிதமாய் எழுதியிருப்பது தவறென்றும் தெரியவருகிறது. பீமசேனர் கட்டியிருக்கும் அணை சேது, இருக்கும் ஊரில் இந்த மடம் இருப்பதால் பீமன கட்டே மடம் என்று சொல்லப்படுகிறது. பும்ஸாம் மோகன ரூபாய என்று புருஷர்களையும் மோகிக்கும் படியாய் ரகுதிலகரான ஸ்ரீ ராகவன் இருந்தது போல் அப்பெயர் கொண்ட இந்த ஸ்வாமிகளும் அழகிய ரூபம் பெற்று மிக்க பக்தியுடன் பூஜாதிகளைச் செய்வது மிகவும் கொண்டாடத் தகுந்ததாய் இருக்கிறது.

# ஸ்ரீமத்வ் மந்திர ரத்னாகரம்.

இப்பெயர்கொண்ட வெகு அருமையான மந்திர நூல் ஒன்று சமீபத்தில் இந்நகர் மத்வவிலாஸ புத்தகாலயத்தின் மானேஜரான ஸ்ரீமான் டி. கே. வெங்கோபாசாரியாரால் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காண மிகவும் சந்தோஷிக்கிறோம். இந்நூலை சிறிது ஊன்றிப்பார்க்கின் இதன் ஆசிரியரான ஸ்ரீமான் பண்டிட் டி. ஆர். கிருஷ்ணாசாரியாரின் மந்திர சாஸ்திரத்திலுள்ள பெரும் உழைப்பும் விசேஷபாண்டித்யமும் பிரசுரத்திலிருக்கும் மிகுந்த அவாவும் நன்கு வெளியாகிறது. ஸ்ரீ ஆனந்ததீர்த்த பகவத் பாதாள் தந்திரஸாரமென்னும் தமது மந்திர சாஸ்திர நூலில் எடுத்துக்காட்டப்பட்டவைகளும் மற்றும் மாத்வமஹனீயர்கள் இதர புராணாதிகளிடமிருந்து எடுத்து அனுஷ்டித்துக் கொண்டிருந்தவைகளுமான சுமார் 110 மந்திரங்களைத் திரட்டி ஒருங்கே சேர்த்து அவைகளின் அங்கன்யாஸம் கரன்யாஸம் தியான சுலோகங்களுடன் வெகு சுத்தமாய் பராபேக்ஷயன்னியில் ஜபானுஷ்டானம் செய்யத் தெரிந்துகொள்ளும் ரீதியில் இதில் அச்சிடப்பட்டிருக்கிறது. மேலும் இந்த மந்திரங்களுக்கு எமது மத்வமத கிரந்தங்களில் ஆங்காங்கு சொல்லப்பட்டுள்ள அர்த்தங்களை ஸுலபமாய் எல்லோரும் தெரிந்து கொள்ளும்படி ஸம்ஸ்கிருதத்தில் எளிய நடையில் ஓர் டிப்பணியும் எழுதப்பட்டிருக்கிறது.

மேலும் இந்நூலின் கடைசி பாகத்தில் வாயுஸ்துதி புனஸ் சரணம் ஸ்ரீஸ்துதி புனஸ் சரணம் முதலான ஐந்து புனஸ் சரணங்களின் விதிகள் முதலியவைகளும் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய நூல் இதுவரையில் வேறு எவராலும் வெளியானதில்லை. இந்நூலை ஒரு தரம் பாராயணம் செய்தாலும் ஸமஸ்த துரிதங்கள் தொலைவதுடன் ஸர்வாபீஷ்டமும் உண்டாகுமென்று ஸ்ரீபகவத்பாதாள் ஸ்பஷ்டமாய் கூறியுள்ளார். இந்நூல் ஸ்வாமி பெட்டியுடன் தினம் தூபதீப அர்ச்சனாதிகளைப் பெற்றிருந்தாலே கிருகபாதைகள் விஷக்கடிகள் ஜ்வராதி ஸங்கடங்கள் முதலியவை அணுகாதிருக்க பெரும் ரக்ஷையாக இருக்குமென்பதில் ஆக்ஷேபணையில்லை. ஸ்ரீமத்வாசாரியாரின் வாக்யத்தில் திடநம்பிக்கை கொண்ட மாத்வர்கள் ஒவ்வொருவரும் தமது வீட்டில் இந்நூலை ஸங்கிரகம் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். அழுத்தமான இங்கிலீஷ் காகிதத்தில் அழகாய் அச்சான சுமார் 150 பக்கங்களைக்கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ. 3/— தபாற்கூலி அணா 8/—. சிராவண பௌர்ணமிக்குள் ஆர்டர் செய்பவர்களுக்கு தபாற்செலவு இல்லை.

இப்புஸ்தகம் கிடைக்குமிடம்:—

T. K. வெங்கோபாசாரியார், மானேஜர்,
மத்வ விலாஸ புஸ்தகாலயம்,
கும்பகோணம்.

## விசேஷ தினங்கள்.

### ஜ்யேஷ்ட மாஸம்.

| | | |
|---|---|---|
| 12—6—35 | புதவாரம் | ஏகாதசி உப. |
| 13—6—35 | குருவாரம் | த்வாதசி, ஹரிவாஸரம் மணி 8.23க்கு மேல் பாரணை. |
| 15—6—35 | சனிவாரம் | ஸ்ரீபாதராஜர் புண்யதினம். |
| 16—6—35 | பானுவாரம் | பௌர்ணமி, வடஸாவித்ரி பூஜை, விஷ்ணுப. உப. |
| 20—6—35 | குருவாரம் | சிரவணம், உப. விஷ்ணுப. உப. |
| 27—6—35 | ,, | ஏகாதசி உப. |
| 28—6—35 | சுக்ரவாரம் | ஸ்ரீஜயதீர்த்தஸ்வாமிகளின் புண்யதினம். |
| 30—6—35 | பானுவாரம் | அமாவாசை திலதர்பணம். |

2-8727
சென்னை 600 003

### மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். ***Certificate of Posting*** பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ. 3 Regd. No M. 2419.


# டி. எஸ். ஆர்.

## அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

| | |
|---|---|
| ஸ்தாபிதம் | தந்திவிலாஸம் |
| 1909 | "கோகுல்" |

எங்கள் வாஸனாதிரவியசாலையில் தயாரித்து விற்பனைக்கு தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கரி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்


Printed at SRI VENKATESWAR PRINTING WORKS and Published by Bhagavata Ranganuthachariar, Kumbakonam.